விலை 2 அணா. REGD. NO. 4642.

திராவிடநாடு

மலர் 12 | 12—7—53 | இதழ் 2

[கற்பனை]

முடிவு

[கண்ணதாசன்]

அது ஒரு தீவு.

தென்னஞ்சோலை — செடிகொடிகள்—சுழன்றடிக்கும் காற்று—பறவைகளின் சப்தம்—இதைத்தவிர வேறு நாதியே இல்லாத அனாதிப்பூமி அது.

அதற்குப் பெயர் இல்லை. எந்த அரசாங்கத்துக்கும் அதன் மீது உரிமை இல்லை. அதை விற்போரில்லை; ஆகவே வாங்குவோரில்லை!

மனிதனின் காலடிபடாத பூமி அது! அந்தத் தீவிலே—ஒரு நாள்...

வடக்கேயிருந்து ஒரு படகு வந்தது. அதில் ஒரே ஒரு மனிதன் வந்தான். பிரக்ஞை இல்லாத அந்த மனிதன், தூங்கியபடியே படகை விட்டு இறங்கினான். முதல் மனிதனின் காலடி அந்தப் பூமியிலே பட்டுவிட்டது!

தெற்கே இருந்து ஒரு படகு...

அதிலும் ஒரு மனிதன் வந்தான். அவனும் அந்தப் பூமியிலே இறங்கினான்.

கிழக்கிலிருந்து ஒரு படகு வந்தது. அதில் மூன்றுபேர் இருந்தார்கள். ஒருவன் மட்டுமே அதில்-ஆடவன்! மேற்குப் படகில் ஒரு இளைஞன் வந்தான். ஆறுபேர்—அந்தத் தீவில்.

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண் விழித்தார்கள். அறிமுகம் நடந்தது. வடக்கிலிருந்து வந்தவன் சொன்னான். "நான் ஒரு கவிஞன். என்பெயர் மாயாண்டி. புனை பெயர் மாயக்கவி. நான் நிறைய கவிதைகள் எழுதியிருக்கிறேன். உலகம் என் புகழை ஓயாமல் பாடுகிறது. என் கவிதைகளைப் படித்த உலகமக்கள் வேதாந்தத்தின் பெருமையைப் பாடிக்கொண்டே இருக்கிறார்கள்"

தெற்கிலிருந்து வந்தவன், அவனை ஆச்சரியமாகப் பார்த்துவிட்டுச் சொன்னான் "நானும் ஒரு கவிஞன் தான். அதுவும் மகா கவி. தலைசிறந்த விமரிசகன். ஏழை மக்களின் ரத்தத்திலே என் கவி கலந்தது. பணக்காரரின் சித்தத்திலே பயங்கரமாகத் தோன்றிற்று. புரட்சி! வர்க்கப் புரட்சி! அலறி அழுகிறது சமுகாயம்! பட்டபாடு வீணாகுமா! அஹ்ஹஹா!"

அவன் சிரித்த சிரிப்பு—அதுவே ஒரு புரட்சி!

கிழக்கிலிருந்து வந்தவர்களில் ஆடவன் சொன்னான், "மாங்கனியைப் பிளந்தது போல் நிறம் படைத்த ஏ! தோழர்களே! நான் யார் தெரியுமா? கலைஞன்—கவிஞன்—என்னுடைய கற்பனைகளில் வேதாந்தம் இருக்காது—புரட்சி இருக்காது. வாழ்க்கை வாழ்வதற்கே! மது! மாது! இவையே உலகம் என்கிற தத்துவம் என் உயிரோடு பிறந்தது! பெண்ணால்தான் நாம் இந்தப் பூமியில் விழுந்தோம்! பெண்! அந்தக் குலத்துக்கு பெருமை வேண்டும்! ஒன்றுக்கு இரண்டாகப் பக்கத்தில் இருக்க வேண்டும்! இதோ இவர்கள் என் காதலியர்! கலை! கவிதை! கலை, மனிதனின் உள்ளத்திலே உருக்கி எடுக்கப்படும்போது கவிதையாகவேண்டும்! நான்......"

அவன் பேசிக்கொண்டே போவான்போல தோன்றிற்று.

மேற்குப்படகில் வந்தவன் இடைமறித்து பேசினான் "பரிதாபத்திற்குரிய என் தோழர்களே! நானும் கவிஞன்தான்"

அவன் இப்படிச் சொன்னதும் அந்த மூன்று கவிஞர்களும் 'ஓ' என்று அழுதார்கள். அழுதார்கள்—அழுதார்கள் — நிறுத்தாமல் அழுதார்கள்! பெண்கள் இருவரும் தலையில் கையைவைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார்கள். மேற்குக்கவிக்கு ஒரே குழப்பம்! ஏன் அழுகிறார்கள்? புரியவில்லை. கடவுள் பிரசினையில், ஆஸ்திகன் முழிக்கிற மாதிரி, அவன் முழித்தான், அழுகையை நிறுத்தப் பார்த்தான்; முடியவில்லை. கடைசியில் அழுகை ஓய்ந்தது.

மேற்குக் கவி கேட்டான்: "ஏன் அழுதீர்கள்?"

திக்கித் திணறி கிழக்குக் கவி சொன்னான்: "நாங்கள் மூவரும் கவிஞர்கள் என்று முடிவானவுடனே, இந்த அனாதித் தீவில் நீ ஒரு ரசிகனாக வந்திருப்பாய் என்று நினைத்தேன். நீயும் கவிஞனானால் என் கவிதையை ரசிப்பதற்கு யார் இருக்கிறார்கள் என்று நினைத்தேன்; அழுகை வந்துவிட்டது"

தெற்குக் கவியும் வடக்குக் கவியும் தலையை ஆட்டி அதை ஆமோதித்துவிட்டு 'ஒப்பாரி' நடத்தினார்கள்.

மேற்குக் கவி யோசித்தான். உண்மைதான் என்றுபட்டது.

மேற்குக் கவி சொன்னான்...... ஆம், விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான். "...என் கவிகளில் வேதாந்தம் இருக்கும். தத்துவம் இருக்கும், புரட்சி இருக்கும்; அழகு ...காதல் இருக்கும். எல்லாம் வாழ்க்கைக்குத் தேவையாய் இருக்கும். எனக்கு செல்வாக்கிலே ஆசை இல்லை. ஆகவே என் கவிதை எந்த உலகம்வரை எட்டியிருக்கிறது என்று கணக்குப் பார்க்கவில்லை..."

அவன் மெல்லச் சிரித்துவிட்டு தரையில் உட்கார்ந்தான்; மண்ணைக் கிளறிக் கிளறி வேடிக்கை காட்டினான்.

வேதாந்தக் கவி ஆத்திரமாக நடந்து அவன் பக்கம் வந்தான்.

"உலகம் பொய்! வாழ்வு மாயம்! இது வேதாந்தம்! உன கவிதைகளிலே வேதாந்தம் இருந்தால் மாய வாழ்வை உண்டாக்கும் அழகு இருக்கக்கூடாது; முடியாது. இரண்டும் உன் கவிதைகளில் இருப்பதாக நீ கூறுகிறாய். எப்படி முடியும்?"

மேற்குக் கவி சொன்னான் — அமைதியாக, 'வேதாந்தம் பாடுகிறேன் நான் அழகையும் காதலையும் பாடுகிறேன் நான். நானும் பெண்ணை மாயம் என்கிறேன். ஆனால் ஒரு பேதம். நீ எல்லாப் பெண்ணையும் மாயம் என்கிறாய். நான், "வாழ்வுககு ஒருமனைவியைக் கொள். பாக்கிப் பெண்களை மாயமாகக் கருது" என்கிறேன். அந்த ஒரு மனைவியிடம் காதல் கொள்ளச் சொல்கிறேன். அங்கேஉன்னுடைய வேதாந்தம் திரிந்து காதலோடு இணைந்து வாழ்கிறது!"

"நீ ஒரு மடையன்!" காதல்கவி கத்தினான்! மேற்குக் கவி திரும்பிப் பார்த்தான்! வேதாந்தக்கவி, காதல் கவி என்ன சொல்லப்போகிறான் என்று எதிர்பார்த்தான்.

காதல்கவி சொன்னான். "ஒரே ஒரு மனைவி! மேற்குக்கவியை, என் மதிப்புக்குரிய மடையனே! ஒரு மனைவி தத்துவம் உப்புச்சப்பற்றது தினம் ஒரே வேட்டியா உடுத்துகிறோம்? தினம் ஒரே உணவா சாப்பிடுகிறோம்? அழகிகள் பலரகம், ரகம் பிரித்து அனுபவிக்கவேண்டும்! மது! வாங்கி வரும்வரை குடிக்க வேண்டும்! என்றாவது ஒருநாள். நாம் செத்துவிடுவோம்! அதற்குள் எல்லாம் அனுபவிக்க வேண்டும்! ஆணைப்படைத்து பெண்ணையும் படைத்தவன், ஒருவனுக்குஒருத்திதான் மனைவி எனறால், இன்னாருக்கு இவள் மனைவி என்று எழுதி அனுப்பியிருப்பான்! ஊரெல்லாம் மனைவி, ஆறெல்லாம் மது! யாரும் யாரோடு வேண்டுமானாலும் சேரலாம்! இதுவே பிறப்பின் தத்துவம்"

காதல்கவி இரண்டு பெண்களையும் பக்கத்தில் அழைத்தான். சிவப்பாக இருந்த ஒருத்திமட்டும் பக்கத்தில் வந்தாள் 'இச்' என்றோர், ஒலி — இருவர்களிடம. பிறகுபேசினான்.

"செப்பவள வாயில் ஒருமுத்தம்! செம்மால் கனிக்கன்னத்தில் ஒரு முத்தம்! உதடு துடிக்கிறது! உள்ளம் துடிக்கிறது! காதல்! அதுமட்டும் இல்லையானால் ஆணுக்கும் பெண்ணுக்கும் படைப்பிலபேதமே தேவையில்லை!"

"பளார்!" என்று ஒரு அறை காதல் கவியின் கன்னத்தில் விழுந்தது! வேதாந்தக்கவி நெருப்பாக நின்றான்.

"சண்டாளப் பதரே! ஒரு மனைவியே கூடாது என்கிறேன் நான். நீ ஊரெல்லாம் மனைவி என்கிறாய்! ஆண்டவன் காதுக்கு இது எட்டினால் என்ன நினைப்பான்? அன்னை பார்வதிதான்..என்ன நினைப்பாள்!" இந்த இடத்தில் வேதாந்தக் கவி திணறினான். புரிந்துகொண்ட காதல் கவி கேட்டான்.

"உன் ஆண்டவன்தான் என்ன வாழ்கிறான்! பார்வதியை என்ன எழவுக்கு மணம் முடித்தான்! அவன் மட்டும் காமக்கூத்தாடலாமோ?"

காதல்கவி இதைச் சொல்லிவிட்டு வெற்றிநடை நடந்தான். வேதாந்தக்கவி அவன் பக்கத்தில் வந்தான்.

"புல்லனே! ஆண்டவன், என்ன, பார்வதியை மனமுடித்தது காமக் கூத்துக்கா! வெறும் விளையாட்டுக்கா? மடையனே! அதை உன் காதல் தத்துவத்தில் சேர்க்காதே! அது பாமரர்களின் காதல்—கல்யாணம் அலல!"

இருவருக்கும் தகராறு முற்றியது. மேற்குக்கவி சமாதானம் செய்தான்.

"தோழர்களே! புரட்சியை ஆரம்பித்துவிடாதீர்கள்! அடிப்படை இல்லாத புரட்சி கூடாது! தீர்க்க யோசியுங்கள். இருவரும் செய்வது தவறு!"

வேதாந்தக் கவியைக் காதல் கவி ஒரு போடு போட்டான். 'சரியான அடி!,

'இப்படித்தான் ஏழையைப் பணக்காரன் அடிக்கிறான்!" — என்று ஒரு குரல் கேட்டது. எல்லோரும் திரும்பினார்கள்.

"புரட்சி! வர்க்கப் புரட்சி! ஏழைகளை வாட்டும் அரசாங்கத்தை நசுக்க வேண்டும்! பணக்காரர்களை மிதிக்க வேண்டும்! கவிஞனின் கவிதைகளில் எல்லாம் அதுதெறிக்க வேண்டும்! உலகில இரண்டு பகுதி! ஏழை! பணக்காரன்! மேல்! கீழ்! ஏழை, பணக்காரனாக வேண்டும்! அல்லது பணக்காரன் ஏழையாக வேண்டும்! அப்போது தான் உலகில் சமதர்மம் நிலவும்! அதற்கு ஒரே வழி புரட்சி! வர்க்கப் புரட்சி! புனிதப் புரட்சி!"

"பணக்காரன் என்றால் யார்?"

"பணம் வைத்திருப்பவன்!"

"அப்படியானால், இரண்டு ரூபாய் வைத்திருப்பவனுக்குமூன்று ரூபாய் வைத்திருப்பவன் பணக்காரன் — மூன்று ரூபாய் வைத்திருப்பனுக்கு ஐந்து ரூபாய் வைத்திருப்பவன் பணக்காரன்! அப்படித்தானே?"

"இல்லை! நான் சொல்வது முதலாளிகளை!"

"முதலாளிகளின் லட்சணம் என்ன?"

"ஏழைகளைக் கசக்கிப் பணம் சேர்க்கும் அனைவரும் முதலாளிகள்! பணத்தைக்குவித்து வைத்துப் பயன் படாமல் செய்வோர் முதலாளிகள்!"

"அப்படியானால் பணம் எங்கே குவிந்திருக்கிறதோ அங்கே முதலாளித்துவம் இருக்கும்! இல்லையா?"

"ஆமாம்!"

"அப்போது... சதை முதலாளிகளைக் காட்டிலும் கல் முதலாளிகளிடம் நிறையப் பணம் குவிந்திருக்கிறதே; அதை கவனிக்க வேண்டாமா?"

"கூடாது! சாமியைப்பற்றி பேசக்கூடாது! பேசினால் ஆஸ்திகர்கள் சமதர்மக் கொள்கைக்கு வரப் பயப்படுவார்கள்! புரட்சி தாமதமாகும்! சிக்கிரம் அரசாங்கத்தைக் கைப்பற்ற முடியாது!"

"சரி! பிறகு கல் முதலாளியிடம் உள்ள பணத்தை எப்போது கைப்பற்றுவது?"

"அரசாங்கத்தைக் கைப்பற்றிச் சட்டம் செய்தால் தீர்ந்து விடுகிறது!"

"அப்போது ஆஸ்திகர்கள் திரண்டு எழமாட்டார்களா?"

"போலீஸ்! ராணுவம்! துப்பாக்கி! ஆஸ்திகர்களை அடக்கி விடலாம்!"

"அது, அன்பு வழியாகாதே!"

"அன்பு—அது, எனக்குப் பிடிக்காது. என்னோடு ஒத்து வாராதவர்களைத்தீர்த்துக்கட்டுவதுதான் எனக்குப் பிடிக்கும். புரட்சி நடத்தி சர்க்காரைக் கைப்பற்றி விட்டால் பிறகு சர்வாதிகாரமே போதும்!"

"தோழனே! இதில் தான் நான் வித்தியாசப்படுகிறேன். எல்லா ரக முதலாளிகளையும் பற்றி பிரச்சாரம் செய்யவேண்டும்! ஆஸ்திகர்கள் மனதையும் மாற்ற வேண்டும்! ஜனநாயக முறையில் அரசைக் கைப்பற்ற வேண்டும்! அப்படிச் செய்தால் சமதர்மமும் வரும் ஜனநாயகமும் வாழும்!"—என்றான் மேற்குக் கவி!

"புரட்சி! கலப்பற்ற வர்க்கப் புரட்சி- முதலில் அது தான் தேவை!" என்று கத்தினான் 'புனிதப் புரட்சிக்கவி!'

அதுவரை கீழே உட்கார்ந்திருந்த அந்தக் கருப்புப்பெண், மேற்குக் கவியின் பக்கத்தில் போய் அமர்ந்தாள்.

காதல்கவி அவளை அழைத்தாள். மறுத்தாள்.

அவள் சொன்னாள்:

"முடியாது! நீ ஒரு மிருகம்! மென்மையை நீ அறியமாட்டாய்! நிதான புருஷன் இவன்தான்! இவனே என் உயிர்"

வேதாந்தக் கவி, கத்தினான்:

"ஏ. பெண்ணே! மாயமே! நீங்கள் கடலிலே விழுந்து செத்துப் போங்கள். உலகம் உங்களால்தான் பாழாகிறது. சீ! பூலோகம் நரகம்! பெண் மாயை! மண் மாயை! அப்பன் மாயை! ஆத்தாள் மாயை! பணக்காரன் மாயை! ஏழை மாயை!"

புரட்சிக் கவி கூறினான்:

"பணக்காரனிடம் இதைச் சொல்; அவன் மாயை! ஏழையிடம் சொல்லாதே"

"ஏழையிடம் சொன்னால் என்ன செய்வான்?"

"உன் எலும்பை முறித்துவிடுவேன்!"

பெரிய சண்டை! புரட்சிக் கவியும் வேதாந்தக் கவியும் வெளுத்து வாங்கிக்கொண்டார்கள்.

காதல்கவி சிகப்புக் காமராணியை அழைத்துக்கொண்டு ஒரு புதர்ப் பக்கம் போனான்

மேற்குக் கவியும் கருப்புப் பெண்ணும் கைகோர்த்தபடி கடற்கரை நோக்கினார்கள். உல்லாசமாகப் பாடினார்கள். திரும்பி வந்தார்கள்

அங்கே!......?

வேதாந்தக் கவி ஆகாயத்தை நோக்கியவண்ணம் கைகூப்பிச் செத்துக் கிடந்தான்.

அவனுக்குப் பக்கத்திலே ஒரு பெரிய குழி தோண்டி யிருந்தது. அதற்குள் 'வர்க்கப் புரட்சிக் கவி' 'அண்டர்கிரவுண்ட்' ஆகிவிட்டான்.

புதருக்குப் பக்கத்தில் கட்டிப் பிடித்தபடி காமஜோடி நரம்புத் தளர்ச்சியால் மாண்டு கிடந்தது.

மேற்குக் கவி காதலியிடம் சொன்னான்: "கண்ணே! எது உண்மை என்று தெரியாமல் அவன் செத்தான். எது புரட்சி என்றறியாமல் இவன் செத்தான். எது வாழ்வு என்று புரியாமல் இவன் மாண்டான். மூன்றையும் புரிந்துகொண்டால்தான் முன்னேற்றம் ஏற்படும்!"

பிணமாக வாழ்ந்த வேதாந்தக் கவி, உண்மையில் செத்துக் கிடந்தான்.

மிருகமாக வாழ்ந்தவன்? அப்படியே!

சாகத் தெரியாத 'உணர்ச்சிவாதி' சாவுக்குத் தயாராக மறைந்தான்.

இன்ப ஜோடி அங்கே குடில் அமைத்தது.

இரவு வந்தது.

அந்தத் தீவிலே...

"ஈரிரண்டு நான்கு பூக்கள்
புல்லிதழில் போய் ஒடுங்கும்;
தமை மறந்து பூரிப்பார்
நலம்பாடி இரவு செல்லும்!"

*

புது மலர்கள்

[எழுத்துக்கள், தமிழ் மக்களை நோக்கி, வலம் வரத்துவங்கியுள்ளன. அவைகளை அறிமுகப்படுத்த விரும்புவோர்—இரண்டு படிகள் அனுப்பிவைக்க விரும்புகிறோம்.]

நாட்டிற்குத் தேவை

'புரட்சிதாசன்' எழுதிய பாடல்கள். விலை 4 அணா.

பாண்டியன் பாசறை—செல்வராசன்கோட்டை, கல்லல் S R.

தூக்கிலே தொழிலாளி

(வே ஆ. கரிகாலன்) விலை 2 அணா

ராயல் பிரஸ், ராஜவீதி, கோவை.

கருணாநிதி

காஞ்சி. கலைச்செழியன் விலை 2 அணா.

ஊழியர் பப்ளிகேஷன்ஸ், காஞ்சி.

"பஞ்சாயத்துச் செய்தி"

திருச்சியிலிருந்து வெளி வரும், மாத இருமுறையான இவ்விதழ், பஞ்சாயத்து சம்பந்தமான கருத்துக்களைத் தாங்கி, பணிபுரிகிறது. கிராம மக்களின் கவனங்களைக் கவரும் வகையில் இதழ், பணியாற்றுமென எதிர்பார்க்கிறோம். விலை 2 அணா.

"பஞ்சாயத்து செய்தி" தெப்பக்குளம், திருச்சி.

"பெண்ணுலகு"

தோழியர் சிவபாக்கியம் பழனிச்சாமியை ஆசிரியராகக்கொண்டு, பெண்ணுரிமை முழக்கம் செய்யும் மாத இதழ், இது. இலங்கை, கண்டியிலிருந்து வெளி வருகிறது. விலை 15 சதம்.

"பெண்ணுரிமை" 27, ராஜவீதி, கண்டி. சிலோன்

கழகத் தோழர்களுக்கு

கழக சம்பந்தமான எல்லாச் செய்திகளையும் 'நம் நாடு' அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேனேஜர்

அன்று சாத்திரம்! இன்று சட்டம்!!

அன்று ஆசிரமத்தில்! இன்று அரசியலில்!!

ஆச்சாரியாரின் அதிகார அம்பு அறிவைக் குழி தோண்டிப் புதைக்கிறது!!

ஆரம்பக் கல்வித்திட்டம் ஒரு அவசரக்கோலம்

[நக்கீரன்]

"யாராரோ என்னென்னவோ சந்தேகங்களைக் கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் இப்போது நினைப்பதோ விவாதிப்பதோ பயனற்றதாகும். சரியோ தவறோ, இதுவல்ல இப்பொழுதுள்ள பிரச்னை. இதனை எப்படி நடத்திவைப்பது என்பதுதான் பிரச்னை. தவறென்று கூறுபவர் பெரிய நிபுணராய் இருக்கலாம். அவர் கூறவும் அதனை நான் கேட்கவுமான நிலைமையிலா நான் இருக்கிறேன்! எனக்கு அதிகாரம் இருக்கும்போதே, நான் எதையெதையெல்லாம் செய்யவேண்டுமென்று விரும்புகிறேனோ, அவற்றையெல்லாம் செய்துவைத்துவிடவேண்டுமென்ற அடிப்படை நோக்கத்துடன் இருக்கும் என்னிடம் சிலர், தங்கள் யோசனைகளைக் கூறி 'இப்படிச் செய்யுங்கள், அப்படிச் செய்யுங்கள், இது தவறு, அது சரி, என்றெல்லாம் உபதேசம் செய்ய வருகிறார்கள். இவர்களுக்கு நான் யார்? எதற்காக அதிகாரத்தை ஏற்றேன்? என்பதே தெரியாது போலும்! எப்படித் தெரியும்? தொண்ணூற்றேழு ரூபாய் வைத்திருப்பவன், மூன்று ரூபா வைத்திருப்பவனைப் பார்த்து, நீதான் என்னைவிடப் பெரிய பணக்காரன் என்று எண்ணுவது மட்டுமல்ல, எல்லோரும் அறிய, 'ஐயா! உன்னிடம் என்னவோ மூன்று ரூபாமட்டுமே இருக்கிறது, என்னிடமோ தொண்ணூற்றேழு ரூபா இருக்கிறது, என்றபோதிலும் நீதான் என்னைவிட மிகமிகப் பெரிய பணக்காரன் என்று கூசாமல் கூறும் கூட்டத்தவர்களாயிற்றே! இப்படிப் பட்டவர்களால் என்னை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? ஒரு கூடை கற்களில் ஒன்றிரண்டு நெல் இருப்பதுபோல், இந்தத் தொண்ணூற்றேழு ரூபாய் பணக்காரனைச் சேர்ந்தவர்களில் ஒரு சிலர், என்னை யாரென்று புரிந்துகொண்டு, நான் செய்கின்ற காரியங்கள் எந்த அடிப்படையின்மீது செய்யப்படுகின்றன என்பதையும் நன்றாகத் தெரிந்துகொண்டு, பொதுமக்களிடம் நான் செய்யும் தவறுகளையும் பித்தலாட்டங்களையும் எடுத்துக் கூற முற்படுகிறார்கள். ஆனால் அவர்களோ சிலர். தன்னிடமிருப்பது வைரம் என்று பலர் சொன்னாலும், இல்லை இல்லை, அது ஒரு கூழாங்கல் என்று கூறிக் குப்பையில் எறிவது போலவும்; சிப்பியில் முத்து இருக்கிறது என்று சொன்னால் அதை நம்பாமல் ஏளனம் செய்வதுபோலவும், இந்த சிலரின் பேச்சை யார் கேட்கப்போகிறார்கள்? அப்படி மீறிக் கேட்டாலும், என்னுடைய அதிகார பலமும், என் அதிகாரத்தைப் பாதுகாக்கும் பத்திரிகைகளின் பலமும் இருக்கும் வரையில் அந்தச் சிலரின் கூச்சல் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது. அதிலும் அந்த சிலரிலேயே பலரை நான் என் கையாட்களாக வைத்துக் கொண்டு, நான் கூறுவதற்கெல்லாம் 'ஆமாம்' போடும்படியான நிலைமையையும் உண்டாக்கிவைத்திருக்கிறேன். இப்படிப்பட்ட சிறந்த சூழ்நிலையை அமைத்துவைத்துக் கொண்டு அதிகாரத்தில் உட்கார்ந்திருக்கும் என்னைச் சிலர் இலேசாக எண்ணிக்கொண்டு, நான் செய்கின்ற காரியங்களை எதிர்த்தொழித்துவிடலாம் என்று கனவு காண்கிறார்கள்.

குப்பையில் எறிந்தது கூழாங்கல் அல்ல, வைரம்தான் என்பது தெரிந்தபின்னரும், சிப்பியில் இருப்பது முத்துத்தான் என்பது அறிந்த பின்னரும், குப்பையில் எறிந்த வைரத்தை எடுத்துவைக்கவோ, முத்திருக்கும் சிப்பியைப் பாதுகாக்கவோ, மனம் ஒவ்வாதவர்கள்—தைரியமில்லாதவர்கள், தானே அவர்கள் என்பது எனக்குச் சந்தேகமறத் தெரிந்திருக்கும் வரையில், என்னை எவரும் எதுவும் செய்துவிட முடியாது."

இப்பொழுது, ஆரம்பக் கல்வித் திட்டத்தைப் புகுத்தியிருக்கும் ஆச்சாரியார் இவ்வாறெல்லாம் கருதிக் கொண்டுதான் இந்தக் கவைக்குதவாக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். யார் எந்தக் காரணத்தைக் காட்டி இத் திட்டத்தை எதிர்த்தாலும், தான் இதனைக் கைவிடப் போவதில்லை என்று கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு கூறுகிறார். தாம் 'கன'மாய் இருக்கும் ஒரு காரணத்தை மட்டும் வைத்துக் கொண்டு. இந்தக் 'கனம்' கணத்தில் மறையக் கூடியது என்பதை அறியாதவரா ஆச்சாரியார்? அணையும் விளக்கு ஒரு முறை—கடைசி முறையாகச் சுடர்விட்டெரியுமாமே! அதுபோல, ஆச்சாரியாரின் அதிகாரம் எனும் விளக்கு அணையும் காலம் அண்மையில் தான் இருக்கிறது என்பதை அறிவிப்பது போல் இருக்கிறது இந்த ஆரம்பக் கல்வித் திட்டத்தை அவர் புகுத்தியிருக்கும் முறையும், தன்மையும்.

இல்லையென்றால், எதிர்ப்பு, எந்த அளவில் இருக்கிறது — எந்தெந்த முகாமிலிருந்து கிளம்பி இருக்கிறது — யாரார் எதிர்க்கிறார்கள்—எப்படிப் பட்டவர்கள் எதிர்க்கிறார்கள்—ஏன் எதிர்க்கிறார்கள்—

(13-ம் பக்கம் பார்க்க)

'டாலரின்' சஞ்சலம்!

"நவநாகரீகமான கட்டிடங்களைக் கண்டேன்—அலைகளின் ஓரத்தில் புனிதமானதென்று பூஜிக்கப்படும் மிருக ஜாதிகள் படுத்திருப்பதையும் கண்டேன் ஜ்வாலை எழுப்பும் உலைக்கூடங்களையும் அங்கே உருகி வழியும் எஃகையும் கண்டேன்—அதோடு, அம்பும் வில்லும் ஏந்தி நடமாடும் மலைஜாதி மக்களையும் கண்டேன். பிரம்மாண்டமான விஞ்ஞான 'டிராக்டர்'கள் ஒரு பக்கம் உருள்வதைக் கண்டேன்—அதற்குப் பக்கத்திலேயே, தலைகளில் கல் சுமந்தவண்ணம் தள்ளாடிச் செல்லும் பெண்மணிகளையும் கண்டேன். மாளிகைகளைக் கண்டேன்—குடிசைகளையும் கண்டேன். பச்சைப் பசும் வயல்களைக் கண்டேன்—பாலைவனமாகக் கிடக்கும் இடங்களையும் கண்டேன். கற்றுத் தேர்ந்தவர்களையும் கண்டேன்—கல்வி யறிவிலாதோரையும் கண்டேன். களஞ்சியங்களைக் கண்டேன்—கால் வயிற்றுக்குப் போராடும் மக்களையும் கண்டேன். ஆடம்பரத்தைக் கண்டேன்—அவல நிலையையும் கண்டேன். 'ஏப்பம்' விடுவோரைக் கண்டேன் - ஏழ்மையையும் கண்டேன். விசித்திரங்களை எதிர்பார்த்துச் சென்றேன்—ஏமாறவில்லை! — நிரம்ப நிரம்பக் காணக் கிடைத்தன!"

*

அகில இந்தியாவின் புகழ், சுடர்விட்டு ஜொலிப்பதாகப் பேசுகிறார்களே, அந்த இந்தியாவுக்கு, அண்மையில் வந்து சென்ற, அன்னியர் ஒருவர், இவ்வண்ணம் குறிப்பிட்டிருக்கிறார். அந்த அன்னியர், பேனா ஏந்தி வந்த 'நிகோலஸ்' அல்ல—ஆகவே, அவரது கருத்துரைகளைக் கேட்ட, 'இந்து'வும் 'மித்திர'னும் சீறவில்லை—நேருவும் பிறரும் கண்டிக்கவில்லை.

அந்த அன்னியருடைய கட்டுரையை, அழகான இடத்தில் 'இந்து' இதழ் பிரசுரித்திருக்கிறது. 'இந்து'வின் சைலாகு, யாருக்குக் கிடைக்கும்? 'டன்' கணக்கில், இதழடிப்பதற்கான காகிதமும், விதவிதமான இயந்திர வசதிகளும் தந்தபடி இருக்கும் அமெரிக்காவின் அதிபதியாகும் நிலை பெற்றவர்—அந்த அன்னியர். ஐஸன்ஹோவருடன் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டவர்—செல்வாக்கு மிக்கவர்—எதிர்காலத்தில் அமெரிக்க பூமியின் அரசியல் 'தேவதை' அமரும் வாய்ப்பும் வசதியும் பெற்றவர்—அந்தச் சீமானின் திருநாமம் அட்லய் ஸ்டீவன்சன். இத்யாதி மகிமை பொருந்திய மாளிகை பூபதிதான்—மேற்கண்ட கருத்துக்களைத் தீட்டியிருக்கிறார். அவர், இங்கு 'விஜயம்' செய்ததும், இந்திய ஜனாதிபதி ராசேந்திரர் எதிர்கொண்டழைத்தார் — ஆச்சாரியார் அகமலர்ந்தார்—'அன்பரே! நண்பரே!' என்று போற்றினார், நேரு. அத்தகைய அமெரிக்க பூபதி வழங்கியிருக்கும் 'சர்டிபிகேட்'டின் ஒரு பகுதிதான் நாம் மேலே தந்திருப்பது.

*

"ஆலன் துரை, இந்தியாவின் புராதன கலாச்சாரத்தைப் போற்றினார். காந்தியாரின் தத்துவங்களே கவலை தீர்க்கும் மாமருந்தென்று சொன்னார்"

"டல்லஸ் வந்தார். இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டம் காணப் பூரித்தார். நேருவின் சிறப்பைக் காண மகிழ்ந்தார்"

"இன்னும் ஏராளமான கடன் தரும்படி அமெரிக்க சர்க்காரை வலியுறுத்தப்போவதாக செஸ்டர் பௌல்ஸ், சொன்னார். அவருக்கு இந்தியாவின் மீது அவ்வளவு சிரத்தை வந்துவிட்டது"

இவ்விதம், அமெரிக்காவிலிருந்து அடிக்கடி பலர் வருவதும் — அவர்கள் ஆங்காங்கு சென்று ஏதாவது பேசுவதும்—அதனை தேசீய ஏடுகள் பிரமாதமாக எழுதுவதும் — சகஜமான, நிகழ்ச்சிகளாகிவிட்டன.

வருவோரும், சாதாரணரகத்தோர் அல்ல—பேனா ஏந்திய எழுத்தாளனோ, 'பவுடர்' போடும் கலைஞனோ விஞ்ஞானியோ. அல்ல — அரசியல் பூபதிகள். அவர்கள் வருவதும், 'போவதும் — நேருவைக் காண்பதும்—நீண்டதோர் புகழ்மாலை சூட்டுவதும்—எதற்கு என்பதை, எல்லோரும் அறிவர்.

ரஷ்யாவுக்கெதிராகப் பலம் திரட்டும், 'அரிப்பு', அமெரிக்கக்காரர்களுக்கு அதிகமாகிக் கொண்டே, வருகிறது. ஆசியாவில், அதற்குத் தக்கதோர் பாசறையாக, இந்தியா காட்சியளிக்கிறது — 'பாசறை'யை உருவாக்கும் பல பத்திரிகைகளின் செல்வாக்கையும், பத்திரிகைகளின் பாரக்குக்கு அடிபணியும் பல தலைவர்களையும், அமெரிக்கா வளைத்துவிட்டது—'பணவலை' மூலம். அதனால்தான், 'சுதேசமித்திரன்' அச்சுக்கூடம், 'அமெரிக்கன் ரிபோர்டரை'ப் பிரசுரிக்கிறது! ஆச்சாரியார், அமெரிக்காவின் நண்பனாகக் காட்சியளிக்கிறார்!!

ஏடு—தலைவர்கள், இவர்களைத் தனது வலையில் போட்டிருந்தாலும், அடிக்கடி அமெரிக்க பூபதிகளுக்கோர், சந்தேகம் வந்துவிடுகிறது. 'இந்தியா, உண்மையில் நம் பக்கம் இருக்குமா? ரஷ்யாவின் பக்கம் போய்விடுமா?'—எனும் சந்தேகம், அடிக்கடி, வளர வளர. அப்போதைக்கப்போது, அங்கிருந்து யாராவது ஒருவர் அனுப்பப்படுகிறார் — இந்தியாவைச் சுற்றுகிறார் — அளவெடுக்கிறார் — செல்லுகிறார். அவ்விதம், அளவெடுக்க வந்து செல்லும் வரிசையில், முக்கியத்துவம் வாய்ந்தவர்—ஸ்டீவன்சன். கோடி கோடியாகப் பணம் கொட்டித் தருகிறோமே, அந்தப் பணத்தை நமது ஆசைப்படி செலவழிக்கின்றனரா இந்திய சர்க்கார்—அமெரிக்காவிலிருந்து 'நிபுணர்களை' அனுப்பினோமே, அந்த நிபுணர்கள் அமெரிக்காவின் கீர்த்தி பற்றி நன்றாகப் பிரச்சாரம் செய்கிறார்களா—இவ்வளவு சிரத்தையுடன் இந்தியாவில் பாசறை அமைக்கிறோமே, இது, ரஷ்யாவை எதிர்க்கப் பயன்படுமா அல்லது விழலுக்கு இறைத்த நீராகப் போய்விடுமா — இவ்விதம், 'மேற்பார்வை' பார்ப்பது போல், இந்தியாவின் நாலுபக்கங்களையும் சுற்றிப்பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார், ஸ்டீவன்சன்.

அமெரிக்காவின் உதவியோடு இந்திய சர்க்கார் நடத்திவரும் ஐந்தாண்டுத் திட்ட முயற்சிகளைக் கண்டிருக்கிறார்—தாமோதர் நதிப் பள்

ளத்தாக்குகளையும் சாதாரண நீர்த் தேக்கங்களையும் பார்த்திருக்கிறார்—அமெரிக்காவின் நிபுணர்களை அழைத்துவந்து முப்பது கிராமங்களில்—ஆறுலட்சம் கிராமங்களில், முப்பது கிராமங்களில்!—விஞ்ஞான முறைகளைப் பரீட்சைப்பார்க்கிறார்களே, இந்திய சர்க்கார் — அந்தக் கிராமங்களில் சிலதையும் சென்று பார்த்திருக்கிறார். அதற்குப் பின்னரே, அமெரிக்காவிலிருந்தபடி, மேற்படி 'கட்டுரையை' தீட்டியிருக்கிறார்.

அந்தக் கட்டுரையில், எல்லோரையும் போல, இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்ட முயற்சிகளைப் பாராட்டியிருக்கிறார்—சாத்வீகமான முறையில் மக்களிடையில் மறுமலர்ச்சி பூக்கச் செய்யும், ஏற்பாடு என்பதாக.

இந்திய மக்களிடம் ஆழ்ந்து கிடக்கும் மத நம்பிக்கை, கம்யூனிசம் வளரவிடாது—என்ற தன் நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்.

பண்டித நேரு, ஒரு நாளைக்கு எவ்வளவு மணி நேரம் பேசுகிறார்—எப்படியிருக்கிறார்—எவ்வளவு புகழ் அவருக்கு இருக்கிறது — என்பதையெல்லாம், விளக்கியிருக்கிறார்.

'ஏ! ரஷ்யாவே — இதோ, பார் இந்தியா! அங்கே மதநம்பிக்கை அதிகம்—கண்ணாரப் பார்த்தேன்—எப்படி, உன் கம்யூனிசம், புகமுடியும்?' என்று தெரிவிப்பதுபோல, கம்யூனிசம் வளரமுடியாதென்றும், திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

இவ்விதம் தெரிவிப்பதுதான், அமெரிக்கரின் ராஜதந்திரம்—இது, வெற்றியைத் தருமா என்பதுவேறு பிரச்னை — எனினும், சங்கநாதம் செய்திருக்கிறார்.

இந்தசங்கநாதத்தின் முடிவில், ஸ்டீவன்சன், சில சந்தேகங்களைக் கிளப்பி, இவைகளுக்கான பதில், எனக்குக் கிடைக்கவில்லை—இந்தக் கேள்விகளுக்குப் பதில் காணமுடியாதவரை இந்தியாவின் எதிர்காலம் பற்றி, எதுவும் கூறுவதற்கில்லையென்பதாக முடித்திருக்கிறார்.

பொதுவுடைமை பரவாமல் புரட்சி ஏற்படமுடியாதவாறு, இந்திய சர்க்கார் எடுத்துவரும் முயற்சிகளைப்பற்றியெல்லாம் வானளாவப் புகழும் ஸ்டீவன்சன் — முடிவாகக் கூறியிருக்கும் சில விஷயங்களைக் கவனிக்கவேண்டும். "இதைக் கண்டேன்! இதனையும் கண்டேன்" என்று வர்ணித்த அவர் கூறுகிறார்! முரண்பாடுகள் ஏராளம் தென்படுகின்றன — மாளிகையின் பக்கத்தில் மண்குடிசை! நவநாகரீகமான கட்டிடங்களருகே, அருகில் நாயும்—மாடும்! படிப்பில்லை — படித்தவனும் இருக்கிறான்! கழனி இருக்கிறது கரம்பும் இருக்கிறது!—என்று விவரித்து இந்த மேடுபள்ளம் இந்தியாவின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

உண்மை! ஸ்டீவன்சன்மட்டுமல்ல — வெளிநாட்டிலிருந்துவரும் எவரும், இந்த விசித்திரங்களை, எடுத்துரைக்கத் தவறியது கிடையாது. அவர்களெல்லாம் அவ்விதம் எடுத்துரைத்ததற்காக, 'இந்து' போன்ற ஏடுகள் வீசிய கணைகள், ஏராளம். ஆனால், அமெரிக்க ஸ்டீவன்சன் கூறுவதால், கணைகள் பாயவில்லை.

விஞ்ஞானம் விளையாடும் இடத்திலிருந்து வரும் எவருக்கும், இந்திய உபகண்டம், புரியாத புதிர்! விளங்காத கட்டுரை!! — இதில், வியப்பில்லை.

ஆகவே, 'விசித்திரங்களை எதிர்நோக்கிச் சென்றேன் — ஏமாறவில்லை — கண்டேன்' எனக் கூறுகிறார்.

இந்த விசித்திரங்கள் இருப்பதாலேயே, கம்யூனிசம் பரவுவதாகவும், தெரிவித்திருக்கிறார்.

இந்த விசித்திரங்களைப் போக்காவிடில் விளைவு, விபரீதமாகலாமெனவும்—கடைசியில்—தெரிவிக்கிறார்.

இந்த விசித்திரங்களைப் போக்க, இந்திய சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்திருப்பதாகவும் — இவ்வளவு முரண்பாடுகளிருந்தாலும் இந்தியா ஒருபோதும் தன் ஆழ்ந்த மத நம்பிக்கையை விடாதென்றும் ஆகவே கம்யூனிசம் வளரச் சாத்தியமில்லையென்றும், நம்பிக்கையூட்டிக் கொண்டிருக்கிறார்.

ஆனால், இந்த விசித்திரங்களைப் போக்க, அமெரிக்காவிடம் பணம் பெற்று, இந்தியா செலவழித்து வருகிறதே — அதனால் பலன்—பலன் என்ன! [illegible]? — மக்கள் மகிழ்கின்றனரா! மாறுதல் ஏற்பட்டுள்ளதா!

ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கி ஆண்டு இரண்டாகிவிட்டது—அதனைப்பற்றி யாரும் அறிந்ததாகத் தெரியவில்லை — ஆண்டுக்கொரு முறை நடத்தும் 'வனமகோத்சவக்' கேலிக்கூத்தைப்போலவே மக்கள் கருதுகின்றனர் மகிழ்ச்சி மலரவில்லை! முரண்பாடு, ஒழியாவிட்டாலும்—ஒழியுமென்ற நம்பிக்கையும் தோன்றவில்லை.

இந்த நிலையையும், பொதுவுடைமை மனோபாவம் வளரும் எனக் கூறிடும் ஸ்டீவன்சன், சுருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

முப்பது கிராமங்களில் இந்திய சர்க்கார், துவக்கி செய்துவரும் விஞ்ஞான முறையில் கிராமப் புணரமைப்பதேனும் திட்டம் வெற்றி பெறுமா?—எதிர்காலம்தான் பதில் கூறவேண்டும்!

*

பழமைப் பாசம் நிரம்பி வழியும் முறைகளைக் கைவிட்டு, எப்போது இந்தியா முன்னேறும்?—எதிர்காலம் தான் பதில் கூறவேண்டும்!

*

ஆயிரக்கணக்கான ஜாதிகள் தாண்டவமாடுவது, எப்போது சரியாகும்? தொழில் செய்பவன், தாழ்ந்த ஜாதியெனக் கருதப்படும் முறை, எப்போது ஒழியும்?—எதிர்காலம்தான் பதில் கூறவேண்டும்!

*

இவ்வண்ணம், இந்தியாவைப் பீடித்திருக்கும் சில கேடுகளை எடுத்துக்காட்டி, இவைகளுக்கு என்ன பரிகாரம் செய்யப்போகின்றனரோ! எப்படி இதனை ஒழிக்கப்போகின்றனரோ!—என்று, ஆயாசப்பட்டுக் கொள்ளுகிறார்.

இந்தக் கேடுகள் — பொதுவுடைமைக் கொள்கைக்கு உரம் ஊட்டக்கூடியதாக இருப்பதாகவும், ஸ்டீவன்சன், அபிப்ராயம் தெரிவித்துள்ளார்.

ஐந்தாண்டுத் திட்டம் தீட்டிடலாம்—அமெரிக்காவின் பணத்தையும் பெற்றிடலாம் — ஆறுகளையும் நீர்த் தேக்கங்களையும் உண்டாக்கிடலாம். ஆனால், ஆண்டாண்டு காலமாக மக்கள் மனதில் வளர்ந்து கிடக்கும் வர்ணாசிரம பேதத்தை எங்ஙனம் ஒழிக்கமுடியும்? ஆயிர

மாயிரம் ஜாதிகளை, எப்படி ஒன்றாக்கிட முடியும்? ஏர், கலப்பை ஏந்துபவனை 'டிராக்டரில்' எப்படி அமரச் செய்வது—எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்? சாதிச் சனியனை, நாசு கொண்டு சாய்த்திட— முடியுமா! மாசுள்ளம் கொண்ட மக்களின் மனதைப் பரிசுத்தமாக்கப் பணம் மட்டும் போதுமா! — அப்படியே. 'பணம்' போதுமென்றாலும் முப்பது கோடி மக்களின் வாழ்வும் உயர, எத்தனை 'ஐந்து ஆண்டுத் திட்டங்கள்' வகுக்க வேண்டும். அவ்விதம் வகுத்தால், இந்தக் கேடுகளைப் போக்கிட, எத்தனை வருடங்கள் ஆகும்? — அந்த ஆண்டுகள் கழியும்வரை, இந்த ஏழை மக்கள், பொதுவுடைமையின் பாதை நோக்கிச் செல்லாமலா இருப்பார்கள்!—என்றெல்லாம், சந்தேகங்களைக் கிளப்பியிருக்கிறார். 'ஆறு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன—இந்தியாவில். இப்போது, 30 கிராமங்களில், விஞ்ஞான முறைகளைச் சோதிக்கிறார்கள்! எல்லாக் கிராமங்களிலும், இம்முறைகளை அமல் நடத்துவதென்றால், எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்?'—என்று, சஞ்சலம் தெரிவிக்கிறார், ஸ்டீவன்சன்.

இவைகளை விளக்கும்போது, தொழில் செய்வனை இழிகுலத்தான் என்று கருதும் இந்த வர்ணாசிரம முறையின் அடிப்படையைக் குறித்தும், ஆயாசப்படுகிறார்— ஆனால், அதே நேரத்தில், இந்து மதம் ஆழமாகப் பதிந்திருப்பதால், மக்கள் பொதுவுடைமையின் பக்கம் போகமாட்டார்கள் என்றும் திருப்திப்பட்டுக்கொள்ளுகிறார்.

திருப்தியைத் தெரிவிப்பது — 'இந்தியாவும் கம்யூனிஸ்ட்டு நாடாகி விடும்!' என்ற எண்ணம் இதயத்தைக் குடையாமலிருக்கட்டும் என்கிற ஆசையின் விளைவாகும்.

அவரது ஆசையொரு பக்கம் கிடக்கட்டும் — ஆனால், அவரது உள்ளத்தில் பற்பல சந்தேகங்கள் ஊஞ்சலாடியுள்ளன என்பதைமட்டும், கவனிப்போம்.

இந்தியாவைப் பிடித்திருக்கும் கேடுகளை எவ்வண்ணம் ஒழிக்கப் போகிறார்களோ? — எனும், ஐயத்தாக்களான, அவர் "இவைமட்டுமா? தீர்க்கமுடியாத இன்னும் சில பிரச்னைகள் இருக்கின்றன." என்று குறிப்பிட்டு, வரிசைக்கிரமமாக, எழுதியுள்ளார். அதில் முதல். பிரச்னை•

இந்தியா, ஒன்றாகவே இருக்க முடியுமா? என்றோர் ஐயம், எனக்கேற்பட்டிருக்கிறது. ஏனெனில், அவ்வளவு சங்கடமான நிலையில் இருக்கிறது கிட்டத்தட்ட பன்னிரண்டு. பெரிய மொழிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மொழியும் ஒரு கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்பட்டு வருகிறது.

இதுமட்டுமல்ல, தேசத்தை பல ராஜ்யங்களாகப் பிரிக்கப்படவேண்டுமென்னும் கோரிக்கையும் வலுப்பெற்று வருகிறது"

என்று குறிப்பிட்டுள்ளார் — கோயிடி கோடியாகக் கொட்டித் தருகிறோமே, இந்த இந்தியா, இப்படியே இருக்குமோ? என்று சந்தேகப்படுகிறார்.

அதோடு, எந்தக் கட்சியை நம்பி, அமெரிக்க சர்க்கார் இங்கே ஆதரவு திரட்டி வருகிறதோ, அந்தக் கட்சியின் எதிர்காலம் எப்படியிருக்குமோ? — என்றும், கவலை தெரிவித்திருக்கிறார்.

"காங்கிரஸ் கட்சி, பழையதாகி விட்டது. உணர்ச்சியும் ஊக்கமும் குன்றிக்கிடக்கிறது புதிய ஆட்களைக் காணோம். இப்படியேயிருந்தால், என்ன ஆகுமோ?"—என்றும், ஐயப்படுகிறார். அந்தக் கட்சியை நம்பித்தானே, டாலரைக் குவிக்கின்றனர்—அந்தக்கட்சி சேதமுற்றால் என்ன ஆவது? எனும் சஞ்சலம், நியாயமானதுதான — இதனை, எடுத்துக் காட்டிய ஸ்டீவன்சன். மற்றோர் "பயத்தை"யும் வெளியிடுகிறார்— "மிகமிக ஆபத்தான கேள்வி போன்று, இருக்கிறது. இன்று பண்டித நேரு. மிகப் பெரிய தலைவராயிருக்கிறார். ஆனால் நாளையதினம்? பண்டிதருக்குப் பின்னால். யார் இருக்கிறார்கள்—என்ன கதி ஏற்படும்? சுதந்திரப் போராட்டத்திலீடுபட்ட இந்தியத் தலைவர்களில் பலர் சோர்ந்துபோய்விட்டனர். அவர்களிலெல்லாம், இன்னும் சோர்வடையாமலும், அகில இந்தியாவுக்கும் தெரியக்கூடியவராகவும் இருப்பவர், பண்டித நேரு ஒருவர்தான். அவருக்குப்பின், காங்கிரசின், கதி என்ன? இந்தியாவின் கதிதான் என்ன? அவரைப்போல. யாராவது தலைவர்கள். வளர்ந்து வருகிறார்களா என்று பார்த்தால், ஒருவர்கூட இல்லை" என்று, மிகமிக வேதனையோடு வெளியிட்டிருக்கிறார். ஸ்டீவன்சன்.

"இதனை எண்ணிப்பார்த்தேன்—பயமும் திகைப்பும் பிறந்தது. 'நேருவைச் சந்தித்தபோது கேட்டேன்" என்று குறிப்பிட்டு, நேருவுக்கும் தனக்கும் நடைபெற்ற, உரையாடலைக் கூறுகிறார்.

அ:-இப்படி ஒரு 'ஆபத்து' இந்தியாவுக்கு. இருக்கிறது—இல்லையா?

நே:-ஆமாம்—ஒப்புக் கொள்ளுகிறேன்.

அ:-இது, மிகப்பெரிய ஆபத்தாயிற்றே!

நே:-ஆமாம்—என்ன, செய்வது? எனக்கும் கவலை தான்—இருந்தாலும் யோசித்தவண்ணமே இருக்கிறேன்

*

இவ்வளவு சந்தேகங்களுக்கும் சஞ்சலத்துக்கும் ஆளாகியிருந்தாலும், ஒரு நம்பிக்கைமட்டும், அவருடைய, உள்ளத்தை விட்டுப் போகவில்லையாம். இந்தியா ஒரு கம்யூனிஸ்டு நாடு ஆகாது—என்பதுதான், அது. இவ்வளவு பணத்தையும் ஆசையையும் கொட்டிக் கொண்டிருக்கும் அமெரிக்க பூபதிகளுக்கு, இந்த 'நம்பிக்கை'யாவது, இருக்கத்தான் வேண்டும். இல்லையெனில், அமெரிக்கப் பிரஜை, தோள் தட்டிக் கேட்பானே— 'ஏனய்யா, பொய்மானை நம்பி, பொருளை இழக்கிறீர்?' என்று. ஆகவே, இந்தியா, என்றும் ரஷ்யா பக்கம் போய்விடாது என்று 'உறுதி'யாகக் கூறுகிறார். ஆசியாவில் அமெரிக்கர்களுக்கென கிடைத்திருக்கும் ஒரே இடம்—'இந்தியா' தான். அதுவும், சரியில்லை! சாய்ந்துவிடும்!!-என்றெண்ண மனம் ஒப்பாதது தான்.

பாபம். அந்த ஆசையை, அனுபவித்து விட்டுப் போகட்டும்.

ஆனால். அமெரிக்காவின் உதவி கிடைப்பதால், தேனாறு ஓடும்! பாலாறு பாயும்!! என்று, பலவிதம் பாடுகின்றனரே, அவர்களின் விழியும் மூளையும், சிறிது விழித்தெழுந்தால் போதும்.

அதற்கு, இந்த 'டாலர்' பூபதியின் சஞ்சலம், உதவினால், போதும்.

திராவிடநாடு

காஞ்சி] 12—7—53 [ஞாயிறு

ஜூலை 15 சங்கநாதம்

★

தோழர்காள்’—துடித்துக் கிடக்கும் உங்கள் ஆர்வத்துக்கு அரியதோர் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது.

அதிகாரத் தர்பார் நடாத்தும் டில்லிக்கு, நமது வீரத்தையும் விவேகத்தையும் காட்டவேண்டிய சந்தர்ப்பம் நெருங்கிவிட்டது

விழியும் மொழியும் வீரம் பொழிய, வெடிக்கும் இதயத்தோடு பெருமூச்சு விட்டீர்கள்—இதுவரை. இதோ, அறப்போர்! அணி வகுத்திடுவீர்—அட்டகாசத் தர்பாருக்கு எச்சரிக்கை விடக் கிளம்புவீர்.

ஜூலை 15—திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றுக்குரிய சிறப்பான அறப்போர், ஆரம்பமாகப்போகிறது. ஆணவக் குரலும் திமிர்வாதமும், பிடிவாதக் குணமும் அமைந்து, ‘கோலோச்சும் கொடுங்கோலர்களாகிவிட்ட’ டில்லி ஆதிபத்யத்தை எதிர்த்து, தி. மு. க. முரசு கொட்டிவிட்டது.

முட்டாள்! பைத்தியக்காரன்! மடையன்!—வரி கொட்டிக் கொடுத்தும், வாழ்வு கிடைக்காது வகையும் நமக்கு, டில்லியின் தலைவர், இந்தச் சொற்களை வீசியிருக்கிறார். ‘தென்னாட்டு மக்கள், தீராதி தீரனாறாதுது சங்கே!’ என்று பெருமை பேசுவோம், நாம். ரோமாபுரியும், எகிப்தும், நம் எழில் கண்டு மயங்கிய நாட்களை, எண்ணாமலிருக்க முடியாது. பாசறைக்குப் பயப்படாத கூட்டம்! வீரம், நம் விளையாட்டு! வாளும் வேலும், நம் புகழ்ச்சிச் சின்னங்கள்! கங்கைக் கரையும், வடக்கு மலையும், தென்னாட்டின் குரல் கேட்டு அதிர்ந்ததுண்டு. ஆனால், இன்று அந்தக் கங்கைக் கரை, காவிரிக் கரையைக் கேலி செய்கிறது! கங்கை கொண்ட சோழன் — நம் பரம்பரையின் முதல்வன். அவனது பரம்பரையை, காலிகள் என்கிறது டில்லிபீடம்! கனகவிசயன், கர்ஜிக்கவில்லை—சிண்டல் கணை பூட்டுகிறான்—சேரனின் பரம்பரை முட்டாள்களாம்! இழந்த இன்பத்தைப் பெற முயல்வது, பைத்யக்காரத்தனமாம்! டில்லி, சொல்கிறது. வந்தவனுக்கெல்லாம் வளைந்து கொடுத்த ‘டில்லி’யில் வீற்றிருக்கும் ஒரு சிலர், வீரத்தையும் கண்ணியத்தையும் காட்டி வாழ்ந்த ‘கண்ணகியின்’ பரம்பரையைக் கேலி செய்கின்றனர்! புலிக் கூண்டில் சிக்கிய மான், விடுதலை பெறத் துடிப்பது, முட்டாள்தனமாம்—வஞ்சகன் காலகப்பட்ட ஏழை, நிமிர்ந்து நிற்க முயல்வது, மடத்தனமாம்—நரியின் பற்களுக்கிடையில் சிக்கி நசுங்குவதனின்றும் நீங்க முயல்வது, பைத்யக்காரத்தனமாம்—டில்லியின் மூலவர் தெரிவிக்கிறார்! பட்டு மெத்தையும், டாடோபச் சுகமும், பனிநீரும், கனியும் பாலும் உண்டு உறங்கும் ‘சுயராஜ்ய பவன’ச் சொந்தக்காரர், சொல்லுகிறார், இவ்விதம்! சிரித்து வரும் சிந்து நடைக்காரியாம், செத்த மொழி ‘இந்தி’யை எதிர்த்துப் போராடினேம்—‘நான்சென்ஸ்’ என்று அழைத்தார். அந்தளவுக்குக் கல்மனமும் முள் உள்ளமும் கொண்டுவிட்ட பண்டித நேரு, இப்போது சூட்டியிருக்கும் பட்டங்கள் இவை—நாம் முட்டாள்களாம்! தமிழர்கள் பைத்யக்காரர்களாம்! நாம் கோருவதெல்லாம் மடத்தனமாம்!! ‘திருத்தணி’ அறப்போரிலீடுபட்டோருக்கு அத் திருவாளர் வழங்கியிருக்கிறார், இப்பட்டத்தை

‘பண்டித நேரு, ஒரு சின்னப் பிள்ளை!’ என்றார், காலஞ்சென்ற முகர்ஜி. ‘பண்டித நேரு, ஒரு அவசரக்காரர்’ என்கிறார், அவரது அமெரிக்க நண்பர், ஸ்டீவன்சன். அந்தச் ‘சின்னப்பிள்ளை’, ‘அவசரக்காரர்’ சினம் வரும்போதெல்லாம், சீறுகிறது, நம்மீது! நாம் என்ன, கோழைகளா? நரம்பற்ற கூட்டமா?

ஜூலை 15, ரயில் நிறுத்தக் கிளர்ச்சி, தூய்மை நிரம்பியதாக இருக்கவேண்டும். ரயில்வே சொத்துக்களுக்குச் சிறிதளவும் சேதம் இருத்தலாகாது; சொத்து நம்முடையது. பொதுமக்கள் அருவருக்கத்தக்க கூச்சல்கள் கூடாது—பொதுமக்களின் சார்பிலே பாடுபடுபவர் நாம் என்பது நினைவில் இருக்கவேண்டும். பகல் நேரம் மட்டுமே ரயில் நிறுத்தக் கிளர்ச்சியில் ஈடுபடவேண்டும். பொதுமக்களிடம், இந்த ரயில் நிறுத்தம் ஏன், என்பது பற்றி விளக்கவேண்டும். இன்றைய ஆட்சித் தலைவர் நேரு, தமிழர்களை அவமானமடையும்படி ஏசுகிறார் என்பதை எடுத்துரைக்க வேண்டும். வடநாட்டு ஆதிக்கக் குறியாக உள்ள டால்மியாபுரம் என்ற பெயர் எடுபடவேண்டும் என்ற போராட்டம் துவக்கப்பட்டிருக்கிறது, என்பதை எடுத்துச்சொல்ல வேண்டும்.

ரயில் நிறுத்தத்தின் மூலம், நேரு, நாட்டின் நிலைமையை அறியச் செய்யலாம். தமிழரைத் தாழ்வாகப் பேசியதை, நாடு கண்டிக்கிறது என்பதை அவர் அறியச்செய்யலாம். இதுதான் அவருடைய கண்டனத்துக்குச் சரியான பாடமாக அமையும். ஜூலை 15, ரயில் நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்று, செய்திகள் நேருவின் முன்பு குவிந்தால்தான், அவருக்கு திராவிடத்தின் எழுச்சி, தெரிய முடியும். வேறு எந்த வகையிலே, அவர் திராவிடத்தின் எழுச்சியை அறிந்துகொள்ள முடியும். இது போன்ற மாநாடுகளை, அவர் டெலிவிஷன் காட்சியாகக் காணவாபோகிறார்! அல்லது, அவர் பார்க்கும் பத்திரிகைகளிலே செய்திச் சித்திரமா வெளிவரும்? எனவே, பண்டிதர் இங்குள்ள நிலைமையை அறியச் செய்யவேண்டும்.

—தில்லை மாநாட்டில்

சி. என். அ.

தீந்தமிழ் வீரம் சொட்டும் புறநானூற்றின் கூட்டத்தை, 'புல்லேந்தி'ய பரம்பரையினர், கேலி செய்கின்றனர்! அதுவும் எத்தகைய கேலி? — இழிந்தவனும் கூறான்! ஆனால்! பண்டிதர் கூறுகிறார்!! அலகாபாத் பண்டிதராக அவர் இருந்தால்—இதற்குப் பலனை எளிதில் அனுபவித்துவிடச் செய்யலாம். ஆனால், இப்போது அவர் அரசியல் பண்டிதர்! அதுவும், முப்பது கோடி மக்களை ஆளும் பாக்யம் பெற்ற பண்டிதர். அத்தகைய நிலை பெற்றவர், இத்தகைய இழிசொற்களோடு எப்போதும் 'உறவாடுவது; செச்சே! மிக மிக மோசம்—உலகம், கேலி செய்யும். எனவே, அரசியல் மேடையேறியும் 'அசிங்கமான' தொடர்புகளை விட்டறியாத அவருக்குப் புத்தி புகட்ட வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. அரசியலில், அநாகரீகத்தைக் கலக்கச் செய்கிறார், அடிக்கடி. 'அது தவறு' என்பதை, அரசியல் கண்ணியத்துக்காகப் போராடும் நாம் எடுத்துக்காட்டவேண்டும் — அதற்கான நாள், ஜூலை 15

கால் பிடரியில்பட விழுந்தடித்து ஓடும் 'வீரன்' களத்திலே பாய்ந்து கட்கம் தாங்கி, எதிர்ப்பட்டோரையெல்லாம் அதம் செய்யும் ஆண்மகனிடம், வாலைக்காட்டினான். மிஞ்சாது வால்! வாளோடு வந்துவிடும்! அதனை அறியாத நிலையில், அடிக்கடி இழித்தும் பழித்தும் பேசுகிறார், நம்மை. எங்கே நம் வீரம்? ஏறு நடையும், பீடு நோக்கும் பெற்ற, பெருமைக்குரியோரே — 'திரௌபதி'யாள், கண்ணகியின் மீது, காறி உமிழ்கிறாள்! இதனைக் கண்டும், காணாது இருக்க, நாம் என்ன கண்ணற்ற கபோதிகளா? நரம்பற்ற பொம்மைகளா? நாடோடிக் கும்பலா? அல்ல! அல்ல!! கட்டுண்டோம்—பொறுத்திருந்தோம் —காலம், அழைக்கிறது. எங்கே உங்கள் குரல்? எழும்பட்டும், சிம்மநாதம்! அலறட்டும் வடவர் திசை! —என அழைக்கிறது, ஜூலை 15

அந்த நாள், தீந்தமிழ் பூமியின், மானங்காக்கும் நாள்—மறவாப்புகழ் பெற்ற குறளின் கூட்டம், கொத்த வரும் கழுகின் கொடும் அலகினை வீழ்த்தும், நாள்!

அமைதியாக நாம் நடாத்தும் அறப்போர்கள்—பைத்யக்காரத்தனமாம்—மடத்தனமாம் — முட்டாள் கூட்டமாம் நாம். தண்டவாளங்களைப் பெயர்த்து, ரயில்களைவீழ்த்தி நாசகாரத்தனம் புரிந்தவர் — கூறுகிறார். பசுவைக் கேலி செய்கிறது, மலைப்பாம்பு! கண்ணகியைக் கேலி செய்கிறாள், திரௌபதி!! அதுவும், ஒரு தடவை — இரண்டு தடவை அல்ல—சந்தர்ப்பம், நேரும்போதெல்லாம்.

என்ன பொருள், இதற்கு? நமது பொறுமையின் அளவு, நம்மைக் கோழை யென்றெண்ணத் தூண்டிவிட்டதுபோலும்! அமைதியும் சாந்தமும் ஏந்திய நமது நல்லெண்ணத்தின் அளவை, அவர்கள் புரிந்துகொள்ளவில்லைபோலும்!!

அன்போடு கேட்டுக்கொண்டோம்—தீர்மானமூலம் கோரிக்கை விடுத்தோம்—மக்கள்மூலம் மகஜர் அனுப்பினோம் — பஞ்சாயத்து போர்டுகள் 50-க்குமேல்கோரிக்கை அனுப்பின— அத்தனை பெற்றுக்கொண்டும், 'அவர்கள் சொல்வதா? நாம் கேட்பதா!' எனும், அலட்சியத்தை டால்மியாபுரம் எனும் பெயரை மாற்றும் விஷயத்தில், காட்டிவரும் வடவர் தர்பார், வம்புக்கிழுக்கிறது — நம்மை. காலிகள் — கூலிகள் — மடையர்கள், என, ஏசுகிறார் நேரு. கோரிக்கையைத் தெரிவித்தால், கோபம், கொள்கிறார்! அறப்போரிலீடுபட்டால், 'அநாகரீக'ச் சொற்களை வீசுகிறார்!!

அந்தளவுக்கு மமதையும் கர்வமும், அதிகமாகிவிட்டது — வடவருக்கு. நம்மை மனிதர்களாக நினைப்பதில்லை, மண்புழுக்களிலும் கேவலமாகக் கருதுகின்றனர் மாமன்னர்களின் வழிவந்தோரை — செங்கோலேந்தி அறியாத பரம்பரை, நம்மீது சீறுகிறது! பாய்கிறது!!

பணிவோடு கேட்டுக்கொண்டோம், வடநாட்டுத் திமிங்கிலம் டால்மியாவின் பெயர், கூடாது — கல்லக்குடி யென்று மாற்று என்பதாக.

அரசியல் நாகரீகமும் கண்ணியமும் குன்றாத வகையில், மக்களின் மகஜர்கள் மூலமும், மாநாட்டில் கூடிய பல்லாயிரக்கணக்கானோரின் முன்னிலையில் நிறைவேற்றிய தீர்மானங்கள்மூலமும். மதிக்கவில்லை, மரப்பீடம்! சிறுபதில் இல்லை — சிரிக்கிறது 'டால்மியா'புரம் எனும் ரயில்வேபோர்டு. 'சிந்தாமணியும் சிலம்புச் செல்வமும் பூட்டிமகிழ்கிறாள், எம்தமிழ்த்தாய்' என்று புகழ்பாடும், மாணவ மணிகளே! தாயின் உள்ளத்தை அறுக்கும் ரம்பமாகக் காட்சியளிக்கிறது — அந்த ஊர். உடலை எலும்பாக்கி; உதிரத்தை வியர்வையாக்கி; உழைத்து உழைத்து மாள்கின்றனர், ஊருக்குடையோர். ஆனால், எங்கோயிருந்து வந்த 'டால்மியா?' ஏளனம் செய்கிறான். 'ஏறிமிதிக்கிறேன், பார்! என்ன செய்ய முடியும்? என்று கர்ஜிக்கிறான். ஆண்டு ஒன்றுக்கு, அரைகோடி ரூபாய் செல்கிறது அவன் பணப்பெட்டிக்கு. நம்முடைய மண்—சிமெண்டாகிறது. சீமானாகிறான், வடவன்! சீரழிகிறோம், நாம்!! — இந்தச் சித்ரவதைக்கு முடிவே இல்லையா? சிறுநரிகள் கொழுக்க சிதைவதா. நம் திராவிடம்! நந்தவனத்து மலரை நயவஞ்சகன் ரசிக்க, நாமெல்லாம், ஏங்கி நிற்பதா! — இழிவில்லையன்றோ இது? கைப்பொருளை இழந்துவிட்டு, 'காலணா சாமி' யெனக் கையேந்துதல், காணச் சிரிப்பாரோ, பிறர்? வந்தவன் வாழ, சொந்த நாட்டுக்காரன், சோணகிரியானான்—எனும், சோகக் கதைதொடரத்தான் வேண்டுமா?

'டால்மியாபுரம்'—தமிழ் கொழிக்கும் பூமியில். ஆனால், டால்மியாவின் பூமியிலே, சின்னஞ் சிறு தமிழ்ப் பெயரும், கிடையாது! தமிழன் புகழ் தரணியெல்லாம் பரவிக்கிடந்ததென கர்ஜிக்கும், காளைகளே, காண்பீர், இந்தக் கண்றாவிக் கோலத்தை! நஞ்செய் வயலில் களை— நல்லருந்தோட்டத்தில், கள்ளி. ஆகாது! தகாது!!—ஆகவே, வாரீர், என்றழைக்கிறது. ஜூலை 15.

"பேரன்பு கொண்டோரே! எனைப்பெற்றதாய் நாட்டின் தோழர்காள்! வருகிறேன்—வடநாட்டு ஆதிக்கக் குறியாம் டால்மியாபுரத்துக்குச் செல்லுகிறேன். வெற்றியோடு, திரும்பினால், வெற்றி ஊர்வலம் நடத்துவோம் — டால்மியாபுரம் என்னை விழுங்கிவிட்டால், எனக்காக மரண ஊர்வலம் நடத்துங்கள்,'' என்று திருச்சி பூமியிலே நின்றபடி, திருவிடத்தாருக்குச் செய்தி விடுக்கிறார், தோழர் கருணாநிதி. அவரது தலைமையில், ஆயிரமாயிரம் வீரர்கள், அணிவகுத்து

நிற்கிறார்கள், டால்மியாபுரம் அறப் போருக்கு. அந்த நாள்—ஜூலை, 15

அன்று, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?—கருணாநிதியும் காளைகளும், ஆட்சியாளரின் அடிதடிக்கு ஆளாகலாம்—தண்டனை பெற நேரலாம்—'துநதி வெதசாதாரண.—கொள்கை. அதுவே, நம் உயிர்', என்று கர்ஜிக்கிறார்கள், டால்மியாபுரம் அறப்போர் வீரர்கள்.

அத்தகைய அருமையான இளஞ் சிங்கங்களின் தியாக உள்ளத்துக்கு, எங்கே, உங்கள் வாழ்த்து? எழுத்துக்களை அல்ல—பாராட்டுரைகளை அல்ல—அவர்கள் விரும்புவது! அவர்களின் கோரிக்கைக்கு, திராவிடமெங்கும் பாவிக்கிடக்கும், திண்தோள் வீரர்களே — எப்படிக் காட்டப் போகிறீர்கள், உமது ஆதரவும் உண்டென்பதை. வீட்டிலிருந்தபடியா! விழியில் நீரைச் சிந்திடபடியா!—வேண்டாம், வேண்டாம் — கிளம்புங்கள், நாகரீகமற்றதாக இந்தச் சர்க்கார், நாட்டு மக்களின் கண்ணீரை மதிக்காது. கருணாநிதியும் வீரர்களும், களத்திலா! அதுவும் ஒரு அந்நியன் பெயரை மாற்றவா?—என்று, நீங்கள், கலங்குவீர்கள். என் செய்வது! இழிகுணத்தால் மாளிகைகட்டி, ஏமாற்றும் வித்தையால் பந்தல் போட்டு, எத்திப் பிழைப்போரின் பிடியில், சிக்கிக்கிடக்கிறாள், நம் அன்னை. அவளை மீட்க, பெருமூச்சும் கண்ணீரும், உதவி செய்து விடாது. 'ஏதாவது' செய்யவேண்டும். அந்த, 'ஏதாவது', நாட்டின் சொத்துக்கும் மக்களுக்கும் குந்தகம் ஏற்படாதவகையில செய்யப்படவேண்டும். அதற்கான திட்டம், இதோ! என்றழைக்கிறது, ஜூலை, 15.

இவ்விதம் நாம் செய்யும் 'அமைதியான ஆதரவுப் போர்', நம் மீது அநாகரீகச் சொற்களை, அடிக்கடி வீசும் டில்லித் தாக்கியாம் பண்டிதரின் உள்ளத்தை உறுத்த வேண்டும். 'ஊ ராருர், நாம், உளறினோம்! இதோ—இவர்கள் நமக்குப் பாடம் போதிக்கிறார்கள்!'—என்று உணர வேண்டும். அத்தகைய போராட்டம் எதுவென்பதை, தி. மு. க. தெரிவித்திருக்கிறது.

டால்மியாபுரம் மண்ணிலே, நம் மருந் தோழர்கள் பெயர் மாற்றும் போராட்டத்திலீடுபடும் தேதியாம், ஜூலை 15, அன்று, தென்னகமெங்கும் ஓடும் ரயில்களெல்லாம், ஆங்காங்கு நிறுத்தப்படவேண்டும். 15-ம் தேதி பகல் முழுமையும், ஓடிக்கொண்டிருக்கும் ரயில்கள், திடீரென நிற்கவேண்டும்! எவ்விதம்? — எனும் வழிகளை, நீங்கள், அறிவீர்கள். அறிய வேண்டுவோர், 'அபாய அறிவிப்பு' எனும் வாசகத்தில் ஒவ்வொரு ரயில் வண்டியிலும் எழுதப்பட்டிருப்பதைப் படித்துக் கொள்ளுங்கள். ஆங்காங்கு, ரயில்கள், நிற்கட்டும்! அதிகாரிகள் வந்தால், "ஐயா! வடநாட்டுக்காரன் பெயர், நம் நாட்டிலிருக்கிறது. டால்மியாபுரமாம்! அது, வடவர் ஆதிக்கத்தின் அறிகுறி அதனை மாற்றும்படி வேண்டியும் அலட்சியப்படுத்துகிறது, டில்லி. அதற்கு, 'அபாய அறிவிப்பு' செய்கிறோம்—எமது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்" என்று பதில் கூறுங்கள். உங்கள் பதிலில், அன்பு இருக்கட்டும்! ஆத்திரம் வேண்டாம்! அத்தகைய வேலையில் ஈடுபடும்போது, அடக்கம் இருக்கட்டும்—மனம்போனபடி நடக்கவேண்டாம். நமது, கண்டனத்தைத் தெரிவிப்பதுதான், முக்கியம். ரயிலிலிருக்கும் பிரயாணிகள் எல்லாம்—நம்முடையவர்கள்தான். ரயில்களும், ஒரு நாளைக்கு, நமக்குச் சொந்தமாகப் போகின்றவைதான். ஆகவே, சிறு இடைஞ்சலும், ஏற்படக்கூடாது. ஒரு பிரயாணியும், அதிருப்திப்படக்கூடாது. ரயில் புறப்படுமுன் தண்டவாளத்தில் படுத்துக்கொண்டு — 'ஆதரவுப் போரை' நடத்த முயலலாம், பலர். அவ்விதம், ஈடுபடுவோர், அந்த மீறுக வகைகளில், காரியங்களைச் செய்யவேண்டும்—மத்திய சர்க்காரின் ரயிலை, நாம் நினைத்தால், குறிப்பிட்டபடி ஓடச்செய்யாமல் தடுக்க முடியும்—இதைத்தான் ஜூலை 15, காட்டவிரும்புகிறது. இன்று ரயில்! நாளை, மத்யசர்க்காரையே நாம் நினைத்தால், ஒழுங்காக ஓடாமல் செய்யமுடியும் என்பதை, எச்சரிக்க விரும்புவதுதான், ஜூலை 15. எனவே, இந்த 'வெற்றி'யை மட்டும், மனதில்வைத்துக்கிளம்புங்கள். ரயிலை தடுத்து நிறுத்தும்போது வடவரின் தூதவர்களாம் அதிகாரிகள், வரலாம்—'அடிப்போம்' என மிரட்டலாம்—புன்சிரிப்பைக் காட்டுங்கள். 'வா, சிறைக்கு!' எனலாம், "சிறைதான், நமக்கு — மாங்குயில் கூவிடும் சோலையாயிற்றே!" அமைதியும், சாத்வீகமும் நிரம்பிய வகை

(12-ம் பக்கம் பார்க்க)

★ ஜூலை 13 ★

டால்மியாபுரப் போர் மும்முரமாக நடைபெற ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் போதே, மற்றோர் போருக்கும் நாம் அழைக்கப்படுகிறோம்—ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து, ஆச்சாரியார் வீட்டின் முன்பு மறியல் செய்யத் தொண்டர்களுடன் செல்லுமாறு, தோழர் சம்பத் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

இதனை ஜூலை 13-ல் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சுமார் ஐம்பது தொண்டர்கள், ஜூலை 13 முதலே தேவைப்படுவர்.

ஆச்சாரியார் உத்திரவு பிறப்பித்து தோழர் சம்பத்தையும் அவருடன் செல்லும் தோழர்களையும் தாக்கி, இரத்தத்தைச் சிந்தவைத்து அதையே தமது நெற்றிக்குத் திலகமாகத் தரித்துக் கொண்டு, சட்டசபை சென்று கொலுவிருக்கட்டும்.

இரத்தக்கறை படிந்த மனதோடு, அவர், நாட்டை ஆளட்டும்.

அவர் நொண்டெவர்ந்து நினைத்திருக்கும் கல்வித் திட்டம் இந்தியைவிடக் கொடுமையானது— எனவே, அதை போக்க இந்தி எதிர்ப்புக் காலத்திலே நாம் தந்த பலிகளைவிட அதிகமாகத் தந்தாக வேண்டும்.

—தில்லை மாநாட்டில்
சி என் எ.

15-ம் பக்க தொடர்ச்சி

நினைவுக்கு வருகிறது. இந்தத் திட்டம், அவரவர் குலத்தொழிலை அவரவர்கள் செய்து கொள்ளப் பழக வேண்டும் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. ஒவ்வொருவரும் தத்தம் குலத்தொழிலைப் பழகிக் கொள்வதிலேயே காலத்தைக் கழித்து விட்டால், வேறு தொழிலைச் செய்ய அவர்களால் முடியாது. அந்த வேறு தொழில்களை, 'அவர்கள்' அன்றி வேறு யார் செய்ய முடியும்? நாம் குறிப்பிடும் 'அவர்கள்' என்பது, பார்ப்பன மக்களைத்தான்.

பார்ப்பனர்கள், தங்கள் குலத் தொழிலை, நீண்ட காலத்திற்கு முன்னமே விட்டுவிட்டார்களென்று, ஆச்சாரியாரே கூறுகிறார். எனவே, குலத்தொழிலைக் கைவிட்டுத் 'தவித்து' நிற்கும் பார்ப்பனர்களுக்கு, சர்க்கார் உத்தியோகங்களும் பிறவும், கிடைக்க வாய்ப்புச் செய்வதே, இந்தப் புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தின் நோக்கமாகும். எனவேதான், இதனை அறிவும் அனுபவமும் பெற்றுள்ள அனைவரும் கண்டிக்கிறார்கள்—கவைக்குதவாத திட்டம் இது என்று கூறுகிறார்கள் ஆச்சாரியாரை அணைத்து நிற்கும் காங்கிரஸ் தலைவர்களில் பலருமே இத்திட்டத்தைக் கண்டிக்கிறார்கள். காங்கிரஸ் கோட்டையின் மதிற்சுவர் போன்ற 'இந்து'ப் பத்திரிகையே இத் திட்டத்தை எள்ளம் செய்கிறது. என்ற போதிலும், ஆச்சாரியார் அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை. அவர், இதில் மிக மிகத் தீவிரமாக இருப்பதாகத் தெரிவிக்கிறார். "பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, பத்திரிகை ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, அரசியல் தலைவர்களாக இருந்தாலும் சரி, அறிவியல் தலைவர்களாக இருந்தாலும் சரி, சமூகத் தலைவர்களாக இருந்தாலும் சரி யாராக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. அவர்கள் சொல்வதையெல்லாம் ஒரு பொருட்டாக மதித்து நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. நான் இதில் மிக மிகத் தீவிரமாக இருக்கிறேன்" என்று கூறுகிறார், ஆச்சாரியார். இதன் பொருள் என்ன? ஏன்; இதில் இவ்வளவு தீவிரம்? பிடிவாதம்? மனு, ஆச்சாரியாரின் வடிவத்தில் வந்து விட்டார் என்பதைத் தவிர, வேறு இதற்கு என்ன காரணம் கூறமுடியும்! மீண்டும் குலதர்மம் ஓங்குகிறது, சமதர்மம் சாய்கிறது. என்பது தானே இதன் பொருள்.

ஆச்சாரியாருக்கோ வயதாகி விட்டது. இன்னும் அவர் நீண்ட காலம் பதவியில் இருப்பார் என்பது அவருக்கே சந்தேகம். ஒரு வேளை மீண்டும் தப்பித் தவறி பதவி கிடைத்தாலும், அவருக்கு இப்போதிருக்கும் சூழ்நிலையும் ஆதரவும் அப்போதிருக்காதென்பது, நிச்சயமாக ஆச்சாரியாருக்கே தெரியும். எனவேதான், தான் பதவியிலிருக்கும் இந்தக் குறுகிய காலத்திலேயே தமது ஆசைகளைத் தம் இனத்துக்குச் செய்து விட்டுப் போகலாம் என்ற முடிவோடு காரியங்களைச் செய்து வருகிறார். இதற்காகவே தான் தம்மைத் தாமே, ராமானுசர் என்றும் சங்கரர் என்றும் யாரிலும் வல்லவர் என்றும் கூறிக்கொள்கிறார். அவர்கள் ஒன்றைச் செய்தார்கள், நானும் ஒன்றைச் செய்கிறேன்; அவர்களே நான், நானே அவர்கள்—என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார்.

ஆச்சாரியாரால் கொண்டுவரப் பட்டிருக்கும் இத்திட்டத்தை, ஆச்சாரியாரின் தயவால், தங்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கு வகை தேடிக்கொள்ளும் ஒரு சிலரைத் தவிர, நடுநிலை திறம்பாத அனைவருமே கண்டிக்கிறார்கள்—எதிர்க்கிறார்கள். சின்னஞ் சிறுவர்களின் கல்வி அறிவிலும் எதிர்கால வாழ்விலும் அக்கறை கொண்ட ஆசிரியர்கள் அனைவரும் ஒருமுகமாக இத்திட்டத்தைக் கண்டிக்கிறார்கள். தென் இந்திய ஆசிரியர்கள் சங்கத்தின் நிர்வாகக் குழு இப்புதுத் திட்டத்தைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. ஆச்சாரியாரின் ஆதரவாளர்கள் பார்வைக்கு அத்தீர்மானத்தை வெளியிடுகிறோம்:—

"ஜனநாயக நாட்டில் கவனமாகப் பரிசீலனை செய்து, திட்டம் வகுத்துத்தான், புதிய கல்விமுறைகளையும் கொண்டுவர வேண்டும். ராஜாஜி கல்வித்திட்டம் அவசரக் கோலமாகக் கொண்டு வரப்பட்டிருப்பதால், பின்னர், அது அவசரக் கோலமாக மாற்றப்படலாம் என்ற அச்சம் எழுகிறது.

ஆறு முதல் 11 வயதுள்ள குழந்தைகளைப் பெற்றோர்கள் தங்களது வேலையில் ஈடுபடுத்திக் கொள்ள முடியாவிடில், வேறு கைத் தொழிலாளரிடம் வேலை செய்ய அவர்களை அனுப்பலாம் என்று புதிய திட்டம் கூறுகிறது. இது கொள்கை ரீதியிலும் அனுஷ்டான ரீதியிலும் சரியான ஏற்பாடல்ல. கைத் தொழிலாளரிடம் சிறு குழந்தைகளை வேலைக்கு விடுவது அபாயகரமானது. 10 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களை வேண்டுமானால் இவ்வாறு விடலாம்.

சர்க்காரிடம் போதிய நிதிவசதி இல்லாததால், புதிய கல்வித் திட்டம் மூலம் அதிக சாதனங்கள் தேவைப்படாமல் அதிகக் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கலாம் என்று கூறப்படுகிறது. இதற்காக ஷிப்ட் முறையில் வேலை செய்ய உபாத்தியாயர்கள் தயார். ஆனால் ஷிப்ட் முறையை ஏற்படுத்துவது புதிய திட்டத்தின் நோக்கமல்ல என்று கூறப்படுகிறது. இது புதிராய் இருக்கிறது.

குழந்தைகள் பாடசாலையில் வெறுமனே எழுதப் படிக்கத் தெரிந்துகொள்ளத்தான் புதுத் திட்டம் வழி செய்கிறது. சமூக ஒழுக்கம், உழைப்புத் திறன் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு பெற்றோர்களுக்கு விடப்படுகிறது, ஜனநாயக நாட்டில் குழந்தைகளுக்குப் பூரண கல்வியை அளிக்கும் பொறுப்பு சர்க்காரிடமே இருக்கவேண்டும்.

புதிய திட்டத்தினால் கல்வியின் தரம் குறையும். புதுத் திட்டத்தினால் அதிகக் குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வருவர் என்ற நம்பிக்கையும் நிறைவேறாமல் போகலாம். இன்னமும் அகாலமாகவில்லை; இப்போதாவது இவ்விஷயம் முழுவதையும் ஒரு சரியான ஸ்தாபனத்தின் மூலம் போதியபடி பரிசீலிக்க வேண்டும்."

இத்தீர்மானத்தை நிறைவேற்றிய ஆசிரியர்கள், தீர்மானத்தின் வாசகங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட சொற்கள், ஆச்சாரியாரின் ஆட்சிக்குக் கீழ் அவர்கள் அலுவல் பார்ப்பவர்களாய் இருப்பதால், எங்கே

தங்களுடைய தொழிலுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சத்தால், நயமாகவும், அதே சமயத்தில் பயமூட்டுவதுமான சொற்களைப் பயன்படுத்தித் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்! இந்த அளவு துணிச்சலோடு தீர்மானத்தை நிறைவேற்றிய தென்னிந்திய ஆசிரியர்கள் சங்க நிர்வாகக் குழுவை நாம் பாராட்டுகிறோம்.

எனவே, இந்தக் கலைக்குதவாத் திட்டம் கைவிடப்படும் வரையில் திராவிட முன்னேற்றக் கழகம் எத்தகைய கஷ்டநஷ்டங்களையும் ஏற்று வெற்றிகாண ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறதென்பதை, இத்திட்டத்தை எதிர்க்கும் அன்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

★

10-ம் பக்கத் தொடர்ச்சி

யில், ஜூலை 15, வெற்றிகரமாக்குங்கள். தென்தமிழ் பூமியின்மீது படியும் அவமானக் கறையை நமது தியாக இரத்தத்தால், கழுவிக்கொள்வோம்.

ஜூலை 15—ஒரு எச்சரிக்கை நாள்.

ஜூலை 15—ஆதிக்க வெறியின் அழிவுக்கு முரசுகொட்டும் நாள்.

டால்மியாபுரத்தில், அறப்போர், முழக்கம் கேட்கும் — ஆதிக்கபுரிக்கு.

நாடு முழுமையும், அதற்கான ஆதரவு முழக்கம் கேட்கட்டும்— அதனை பண்டிதர் அறிய வாய்ப்பேற்படட்டும்.

அஞ்சாநெஞ்சம் படைத்த, ஆருயிர் வீரர்காள்! சந்தர்ப்பம், அழைக்கிறது, உங்களை. தயாராகுவீர்! வாட்டிடும் வடநாடும், குலதர்பச் சிறையில் பூட்டிடும் ஆச்சாரியாரும், நமது 'குரலி'ன் வலிவைக் காண வேண்டிய நேரம், இது. எங்கு நோக்கினும், நம் எதிர்காலத்தைச் சூழ்ந்துகொள்ளும இருண்ட மேகங்கள், தென்படுகின்றன. இதனை, நீக்கும் பொறுப்பு, நம்முடையதன்றோ! இந்தக் காரியங்களுக்கெல்லாம், தயாராகுங்கள் — ஒருபக்கம் நேரு! மற்றோர் பக்கம் ஆச்சாரியார்!! இரண்டு சர்க்கார் — இடையிலே, நாம். இதனை, எண்ணிப் பாரீர்! எத்துணை வெட்கக்கேடு, இது. தாயகத்தின்மீது தருக்குத் தாண்டவம், புரிகிறது, 'டில்லி! தாயக மக்களை, ஊமையாக்க முனைகிறார், ஆச்சாரியார்!

இந்த அக்கிரமத்துக்கு, சாவுமணி அடிக்கவாரீர்! தயாராகுவீர்!!— ஜூலை, 15, அழைக்கிறது. அது, நமக்கோர், தியாகதினம்—விடுதலை வரலாற்றின் முக்கியதினம். திராவிட முன்னேற்றக் கழகம், வடவரை நோக்கிச் செய்யும், சங்கநாததினம்! அன்று, உங்கள், கடமையைச் செய்வீர்—கலங்குகிறாள், நம் அன்னை. அவளின் காலில் விலங்குகள்!— அதனை, அறுத்தெறியத் துடிக்கும், சிங்க இளைஞர்காள், தீந்தமிழ் வீராங்கனைகாள், திரண்டு எழுவீர்! திசையெங்கும் இனமுழக்கம் கேட்கச் செய்வீர்!

ஜூலை 15—வந்து கொண்டிருக்கிறது — விரைவீர்! தயாராகுவீர்!! தருக்கர் கொட்டமடக்குவீர்!!!

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்-

முதல் காணிக்கை

தி. மு. க. ஆதரவு பெற்று வெற்றி பெற்ற எம். எல். ஏ-க்களிடம், ஆச்சாரியாரின் குலதர்மக் கல்வித் திட்டம் குறித்து, ஆங்காங்கும் ஜூலை 8-ந் தேதி, மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

மக்களுக்கு ஒவ்வாத திட்டங்களை யெதிர்த்துப் போராடும்படி, தாங்கள் தேர்ந்தெடுத்த எம் எல். ஏ-க்களிடம் உறுதிமொழி பெற்றுக்கொண்ட காட்சி, உலக அரசியலில் காண முடியாது.

ஜனநாயக ரீதியில், அமைதியுடன் பல இடங்களில் நடைபெற்றிருக்கிறது.

ஆனால் சென்னையில் மட்டும் 8-ந் தேதி 57 தி. மு. க. தோழர்களும், 9-ந் தேதி 10 தி. மு. க. தோழர்களும், ஆச்சாரியாரின் ஆட்சியால் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளார்கள். 8-ந் தேதி கைதானவர்களில் நமது முன்னணி வீரர் தோழர் ஏ.வி.பி.ஆசைத்தம்பியும் ஒருவர். மறுநாள் கைதானோரில் வீராங்கனை ஒருவரும், இருக்கிறார்.

நமது கண்கள், சிறையில்!— ஆச்சாரியார், எரிமலையைக் கிளறிவிடுகிறார். அமைதியும் கண்ணியமும் நிரம்பியோர், நாம். ஆனால், அதிகாரம் கையிலிருப்பதால், நம்மைச் சிறையில் பூட்டுகிறார். 67 தோழர்கள்—ஆச்சாரியாரின் கொடுவாய்க்கு, முதல் பலி! அநியாய சர்க்காரை எதிர்த்துப் போராடும் அந்த வீரக்காளைகளை வாழ்த்துகிறோம்— வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

ஜூலை 15-ல்

டால்மியாபுரம் போராட்டம் ஆரம்பமாகிறது.

★

கிளர்ச்சியில் கலந்துகொள்ள இசைவு தந்த தோழர்களே!

தயார்! தயார்! தயார்!

4-ம் பக்கத் தொடர்ச்சி

என்பனவற்றை நன்குணர்ந்த பின்னரும்—உணர்த்தப்பட்ட பின்னரும் விடாப்பிடியாய் இருக்கிறார் என்றால்—எதிர்ப்புகளுக்கெல்லாம் சத்தற்ற சமாதானம் சொல்லிக்கொண்டிருக்கிறார் என்றால், அதன் பொருள் என்ன? "நல்லதோ கெட்டதோ, நான் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தால், அதை, எந்த விதத்திலாவது—எத்தனை எதிர்ப்புக்களுக்கிடையிலாவது நிறைவேற்றித் தீருவேன்" என்று ஒருவன் கூறினால், அவனுடைய நிலை என்ன ஆகும் என்பது ஆச்சாரியாருக்குத் தெரியாத ஒன்றா? தெரிந்தும் செய்கிறார் என்றால், அணையும் விளக்கு சுடர் விடுகிறதென்பதுதானே அதன் பொருள்.

கல்வியில் நிபுணர்கள், அரசியல் தலைவர்கள், பொதுநலப் பிரியர்கள் அனைவருமே இத்திட்டத்தை எதிர்க்கிறார்கள். என்றாலும் ஆச்சாரியாருக்கிருக்கும் அதிகாரம் என்னும் அம்பு அனைவருடைய எதிர்ப்பையும் அலட்சியப் படுத்திவிட்டு, அறிவுக்கு அப்பாலும் சென்று, எங்கெங்கு அறியாமை நிலவுகிறதோ, அங்கெல்லாம் கூடிக் குலவிவிட்டு மீண்டும் ஆச்சாரியாரிடம் வந்து அடைக்கலம் புகுந்துவிடுகிறது. அறிவைக்கண்டால் குத்தித் தைப்பேன்—குடலைப் பிடுங்குவேன் என்று கூறுகிறது. அறியாமையைக் கண்டால் ஆரத்தழுவி அன்போடு அணைத்துக் கொள்கிறது. அதிகாரத்தை அம்பாக்குபவர்கள் ஆட்சியில் இருக்கக்கூடாது — அதிகாரத்தை அன்பாக்குபவர்களே ஆட்சியில் அமரவேண்டும் — ஆட்சிமுறை அன்பும் அறிவும் கலந்ததாக இருக்கவேண்டும். அப்போதுதான் நாட்டுக்கு நன்மை உண்டாகும்.

ஆனால், ஆச்சாரியாரோ தமக்குக் கிடைத்த அதிகாரத்தை அம்பாக்கி, பொதுமக்களின் நலன்களைக் குத்திக் குடைந்து பிடுங்கி எறிந்து அன்பையும் அறிவையும் நாட்டைவிட்டே ஓட்டப் பார்க்கிறார். இப்போது ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டிருக்கும் புது ஆரம்பக் கல்வித் திட்டம் இந்த வேலையை நன்றாகச் செய்யும் என்று தெரிவதாலேயே, அறிவாளிகளும், சின்னஞ் சிறுவர்களிடத்தில் அன்பும் அவர்களின் எதிர்கால வாழ்வில் நல்லெண்ணமும் உடையவர்களும் இந்த வேண்டாக் கல்வித் திட்டத்தை வெறுக்கிறார்கள் — விரும்பத்தகாததென்கிறார்கள். என்றாலும், ஆச்சாரியார், அவ்வப்போது அதிகாரமெனும் அம்பைக் கூராக்கி, அதன் பளபளப்பைக் காட்டிப் பயமூட்டுகிறார். என்னிடம் அதிகாரம் இருக்கிறது. எதை வேண்டுமானாலும் செய்வேன் என்று எக்காளமிடுகிறார்.

எனவேதான்,

"பலர் தெரிவித்த சந்தேகங்கள் எனக்கு மனக்கலக்கத்தை ஏற்படுத்தவில்லை. எது சரி எது தவறு என்பது இப்போதுள்ள பிரச்னை அல்ல திட்டத்தை எப்படி நடத்திவைப்பது என்பதுதான் இப்போதுள்ள பிரச்னை"

என்று இறுமாப்புடன் பேசுகிறார். சந்தேகங்கள் அவருக்கு மனக்கலக்கத்தை ஏற்படுத்தவில்லையாம். கடல் கலங்கிக் கரை புரண்டாலும், கண்ணன் காட்டிய வழியைக் கண்டவருக்கு மனம் கலங்கவில்லையாம்! எப்படிக் கலங்கும்? தன்னை எதிர்த்துப் போரிட எதிரில் வந்து நிற்பவர்கள் எல்லாரும் தன்னுடைய உற்றார் உறவினர் என்பதைக் கண்டு கலங்கி நின்றானாம் அர்ச்சுனன். அவனுடைய கலக்கத்தைப் போக்கக் கண்ணன் கீதையை உபதேசித்தாராம். உடனே அர்ச்சுனனுடைய கலக்கம் தெளிந்து தன்னுடைய உற்றார் உறவினர் அனைவரையும் கொன்றானாம். அந்த 'நல்ல காரியத்தை'ச் செய்து முடிக்க ஆபத்பாந்தவனும் கண்ணன் துணையாகவும் கருவியாகவும் இருந்தாராம். (இது ஒரு கதை — உண்மைக்கு வெகு தொலைவில் உள்ளது) அப்படிப்பட்ட ஜீவகாருண்ய சொரூபரான கண்ணன் காட்டிய வழியை மற்றவர்களுக்குக் காட்டிய அன்பர் ஆச்சாரியார் கூறுகிறார், தன்னுடைய மனமும் கலங்கவில்லை என்பதாக. கலக்கம் எப்படிவரும்! கண்ணன் என்ற ஒருவர் இருந்ததாகச் சொல்லப்படும் அந்தக் காலத்திலிருந்து இன்றுவரை, கண்ணன் காட்டிய வழி செல்பவர்கள் அனைவருக்குமே கலக்கம் ஏற்பட்டதில்லை. அதாவது சுயநலத்திற்காகச் செய்யப்படும் காரியங்கள் அனைத்திற்கும் கையாளப்படும் முறைகள் எல்லாமே சிறிதும் கலக்கமின்றிச் செய்யப்படுபவைதான். இதற்குப் பார்த்தனை ஒரு எடுத்துக்காட்டு. இன்னும் இது போன்ற எத்தனையோ கதைகள் உள்ளன, தன்னலம் ஒன்றையே கருத்தில் கொண்டு கலக்கம் சிறிதுமின்றிக் கொடுமைகள் பல செய்யப்பட்டமைக்கு எடுத்துக் காட்டாக.

இப்பொழுது ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆரம்பக்கல்வித் திட்டமும், முழுக்க முழுக்கச் சுயநலத்தை அடிப்படையாக வைத்து உண்டாக்கப்பட்டதே என்பது, ஆச்சாரியார் அதைப் புகுத்தும் அவசரத்தால் நன்கு தெரிகிறது. இந்தத்திட்டம் ஏன் இவ்வளவு அவசர அவசரமாகப் புகுத்தப்படுகிறது என்ற கேள்விக்கு விடை கூறவந்த ஆச்சாரியார்,

"இப்பொழுதுள்ள துரித காலத்தில் எதையும் சாவதானமாகச் செய்வதற்கில்லை முன் காலத்தில் எல்லாம் நாம் கால்நடையாகச் சென்றோம். இப்போது கார் தேவைப்படுகிறது. ஆகவே குறுகிய காலத்திலேயே எதையும் செய்ய வேண்டியிருக்கிறது"

என்று கூறுகிறார். அன்று நடந்தவன், இன்று காரில் போகிறான். ஆனால், அன்று நடந்த அனைவருமே இன்று காரில் செல்லும் வாய்ப்பைப் பெறவில்லை. ஒரு சிலர், மிக மிகச் சிலரே காரில் போகிறார்கள். மற்றவர்கள் அனைவருமே அன்று நடந்து சென்றதைப்போலவே இன்றும் நடந்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு கையிலே பஞ்சாங்கமும் கக்கத்திலே தர்ப்பைப் புல்லும் வைத்துக்கொண்டு இன்னொரு கையால் ஈருருளி (Cycle)யின் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு, விரைவாகச் செல்லும் ஒரு புரோகிதனைப் போல. தோளிலே கலப்பையையும் கையிலே மாடுகளையும் பிடித்துக்கொண்டு ஒரு ஈருருளியிலோ அல்லது அது போன்ற வேறொரு விரைவாகச் செல்லும் ஊர்தியிலோ ஒரு உழவனால் செல்லமுடியுமா?

ஒரு காரியத்தை நிறைவேற்ற எண்ணுபவர்கள், அதற்கு ஏற்றதாக ஒரு உதாரணத்தை எடுத்துக்காட்ட முன்வரும்போது, அது அதற்குப் பொருத்தமாக இருக்கிறதா என்பதனை யோசித்துப்பார்க்கவேண்டும். அங்ஙனமின்றி அவசியமற்ற ஒரு காரியத்தை அவசர அவசரமாகக்

கொண்டு வருபவர்கள், அதற்கு உதாரணமாகப் பொருத்தம் சிறிது மற்ற ஒரு சம்பவத்தை எடுத்துக் காட்டினால், அது அறிவுடைமை யாகுமா என்பதனை அன்பர் ஆச்சாரியார் எண்ணிப்பார்த்ததாகத் தெரியவில்லை. எண்ணியிருந்தால், காரின் வேகத்தைக் கல்வியின் வேகத்துக்கு ஒப்பிட்டுப் பேசியிருக்கமாட்டார்.

கல்வி, அனைவருக்கும் பொதுவானது. இதற்கு ஒரு திட்டம் தீட்டுபவர்கள் அவசரக்கோலத்தில் அள்ளித்தெளிக்கக்கூடாது. பொது மக்களின் சார்பிலுள்ள அனைவருடைய ஆதரவையும், கல்வித்துறைக் கதிர்கள் என்று அரசாங்கத்தாலேயே நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் அனுமதியையும் பெற்ற பின்னரே எந்தவிதமான கல்வித்திட்டமாக இருந்தபோதிலும், அதனை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். அப்படிச் செய்வதுதான் ஒரு ஜனநாயக சர்க்காருக்கு ஏற்றதாகும். அங்ஙனமன்றிக் 'கடவுளைப் போல்' "எல்லாம் நானே" என்ற எதேச்சாதிகார முறையில் காரியங்களைச் செய்து கொண்டுபோனால், வண்டி குடைசாய்ந்து கவிழ்ந்துவிடுமென்பதை ஆச்சாரியாருக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

சட்ட நுணுக்கங்களை வழக்கறிஞரிடமும், நோயின் தன்மைகளை மருத்துவரிடமும் கேட்டுத்தெரிந்து கொள்வதுபோலவே, கல்வியைப் பற்றியும் கல்வி நிபுணர்களிடமே கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். கல்வி வல்லுநர்களை ஒன்று கூட்டி, எத்தகைய கல்வி, சிறுவர்களுக்கு ஏற்றது? முதியவர்களுக்கு எப்படிக் கல்வி போதிக்கலாம்? கல்விமுறையை எப்படி எப்படி அமைத்தால் அவர்களுக்கு நல்ல அறிவு ஏற்படும்? பதவிக்கல்வி எது? தொழிற் கல்வி எது? எந்த வயதில் எப்படிப்பட்ட கல்வி போதிக்கப்படவேண்டும்? என்ற இவைபோன்ற பல கல்வி சம்பந்தமான ஆய்வுரைகளை அவர்களிடம் கேட்டுத்தெரிந்த பின்னரே, அதிகாரத்திலிருப்பவர்கள் அதனை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். அவ்விதமன்றி, அமைச்சரும் நான்! ஆசிரியரும் நான்!! அனைத்துமே நான்தான்!!! என்ற அகம்பாவத்தோடு எந்தக் காரியத்தையும் செய்ய முற்பட்டுவிடக்கூடாது. அதிலும் கல்வி என்பது ஒருவருடைய வாழ்க்கைக்கு உயிர்நாடி போன்றது — அறிவை வளப்படுத்தி வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவது. இதனைக் காடு, மேடு, பள்ளம் எங்கு வேண்டுமானாலும் ஓட்டிச் செல்லக்கூடிய டாங்கியைப்போல் முரட்டுத்தனமாகப் புகுத்தக்கூடாது. நல்ல பாதையில் நாசுக்காக ஓட்டக்கூடிய மாரிஸ் மைனர் காரைப்போல் மிகவும் முன் எச்சரிக்கையுடன் புகுத்தவேண்டும். அப்பொழுதுதான் இளம்பிள்ளைகள் கல்வியால் பெறக்கூடிய அறிவு என்ற வெளிச்சத்தைப் பெறமுடியும். அளவுக்கு மீறிய அதிகார போதையினால் அசட்டுத்தனமான காரியங்களைச் செய்பவர்கள் இன்றைய உலகில் எந்த நிலைக்குக் கொண்டுபோய்த் தள்ளப்படுகிறார்கள் என்பதனை உணரும் எவரும் தான்தோன்றித் தம்பிரானாக நடந்துகொள்ளமாட்டார்கள்.

ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குமுன், அந்தக் காரியம் நல்லதா? கெட்டதா? வெற்றி பெறுமா? பெறாதா? என்பனவற்றை நன்கெண்ணிப் பார்த்தபின்னர் செய்வதுதான் முறை. ஆனால், அன்பர் ஆச்சாரியாரின் முறை இருக்கிறதே, அது, மனித இயல்புக்கே மாறுபட்டதாக உள்ளது. எந்தக் காரியத்தையும் முன்பின் யோசிக்காமலேயே செய்துவிட வேண்டுமென்கிறார்.

"முதலில் காரியத்தை நடத்தி வைத்துவிட்டுப் பின்னர் அதன் விளைவுகளைத் தெரிந்துகொள்ளலாம்"

என்று கூறுகிறார் கிணற்றில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறதென்பதை அறியவேண்டுமானால், முதலில் ஒருவனைக் கிணற்றுக்குள் தள்ளிவிட்டு, அவன் அதில் மூழ்கி மடியாமல் தப்பி மேலே வந்துவிட்டால், கிணற்றில் எத்தனை அடி தண்ணீர் இருக்கிறது என்று கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்கிறார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னாலேயே தனக்கு இந்தத் துறையில் நல்ல அனுபவம் உண்டென்றும் கூறுகிறார். நெருப்புச் சுடுகிறதா இல்லையா என்பதை தொட்டுப்பார்த்த பின்தான் தெரியுமென்கிறார் என்று கூடச் சொல்வதற்கில்லை. நெருப்புச் சுடுமா சுடாதா என்பதே நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சராம் ஆச்சாரியாருக்குத் தெரியாதாம். நெருப்பைத் தொட்டுப் பார்த்தபின்னர்தான் கூறமுடியுமாம். நெருப்போடு பழகியவன், அதாவது நெருப்பின் தன்மையை அறிந்தவன் கூறுகிறான் அது கட்டாயம் சுடும் என்று. இல்லை, இல்லை, தொட்டுப் பார்க்கலாம் என்று சந்தேகத்தோடு கூறினால்கூட அந்தச் சந்தேகத்தைப் போக்கி, நெருப்புக்குச் சுடுந்தொழில் உண்டென்பதைக் காட்டலாம். ஆனால், ஆச்சாரியார் சட்டத்தின் மூலம் ஆயிரமாயிரம் சின்னஞ்சிறுவர்களை நெருப்புக் குண்டத்துக்குள்ளேயே தூக்கி எறிவேன் என்கிறார்.

எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும், பிறருடைய யோசனைகள் எதனையுமே கேட்காமல் தம்முடைய முடிவே சரியானதென்று கூறும் போக்கு ஆச்சாரியாரின் பிறப்புரிமையாகிவிட்டது. கல்லையும் கட்டையையும் கடவுளாக்கி அதனைக் கோடிக் கணக்கான மக்கள் வணங்கும்படி செய்த பரம்பரையில் வந்தவராயிற்றே ஆச்சாரியார். மக்களை அறியாமைப் படுகுழியில் தள்ளிவைக்கும் பழக்கம் ஆச்சாரியார் பரம்பரைக்கு இன்று நேற்று ஏற்பட்டதல்லவே! தொன்றுதொட்டு அவர்களுக்கு இதொன்றுதானே குறிக்கோள். அன்று கடவுளின் பேரால் செய்தார்கள். இன்று சட்டத்தின் பேரால் செய்கிறார்கள். ஆசிரமவாசியாக இருந்த காலத்திலும் நமக்கு (பார்ப்பனரல்லாத மக்களுக்கு) அழிவு தேடினார்கள். அரண்மனைவாசியாக இருக்கும்போதும் அழிவு தேடுகிறார்கள். சூத்திரன் படிக்கக்கூடாதென்று சாத்திரம் எழுதிவைத்த மனுவே இன்று ஆச்சாரியார் வடிவத்தில் இருந்துகொண்டு, சூத்திரன் படிக்கக் கூடாதென்று, சட்டம் இயற்றுகிறார் என்று கூறினால், அது எப்படித் தவறாகும்? அன்று சாத்திரம்! இன்று சட்டம்!! அன்று, நம்பு, இல்லையேல் நரகம் என்றார்கள். இன்று, ஏற்றுக்கொள், இல்லையேல் இரும்புவிலங்கு என்கிறார்கள். அன்றைய ஆசிரமவாசி இன்றைய அரசியல்வாதியாக மாறியிருப்பதைத் தவிர, திட்டங்களில் எந்தவிதமான மாறுதலும் ஏற்படவில்லை. கால மாறுதலுக்கேற்ப, மாற்றப்பட்ட

சில நல்ல திட்டங்களையும் நாடாள வந்த ஆச்சாரியார், பழைய நிலைக்குத் திருப்பிவிடப்படாத பாடுபடுகிறார்.

அதற்காகத் தம்மையும் மறந்து, தம்முடைய பதவியின் உயர்வையும் மறந்து, தாம் படித்த படிப்புக்கேற்பத் தம்மிடம் எந்த அளவு அறிவு இருக்கவேண்டுமென்பதையும் மறந்து, "விளைவைப்பற்றிச் சிந்தியாமல் காரியத்தை முடித்துவிடு, அதனால் நன்மை ஏற்படுமா? அல்லது தீமைதான் உண்டாகுமா? அதைப்பற்றிக் கவலை இல்லை" என்று கூறித் தம்முடைய குறிக்கோள் எது என்பதை சொல்லாமல் சொல்லுகிறார். "என்னுடைய வாழ்நாளில், எனக்குக் கிடைத்துள்ள எதிர்பாராத பதவியின் நிழலில் (நான் யார் என்பதைக் காட்டிக் கொள்ளாமல்) நின்றுகொண்டு என்னுடைய சமூகத்தினர்க்கு என்னாலானதைச் செய்து முடித்துவிடுகிறேன்" என்று சொல்லுவது போல் இருக்கிறது, இந்தப் புது ஆரம்பக் கல்வித்திட்டத்தைப்பார்க்கும்போது.

இந்தத் திட்டத்தை நாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக ஆச்சாரியார்கூறும் காரணங்கள் மிக மிக வேடிக்கையானவை. தம்முடைய சிறுவயது அனுபவங்களை எடுத்துக் கூறுவதன் வாயிலாகத் தம்முடைய 'சிறுபிள்ளைத்தனம்' இன்னும் மாறவில்லை என்பதை வலியுறுத்துகிறார்.

> "நான் சிறுபையனாக இருந்தபோது, மண்பாண்டத் தொழிலாளர்கள் எவ்விதம் பாத்திரங்களைச் செய்கிறார்கள் என்பதைக் கவனிப்பதில் பல மணி நேரங்களைச் செலவிட்டிருக்கிறேன்"

என்று கூறுகிறார். இந்த "நல்லகாரியத்"தில் அவர் ஈடுபட்டிருந்தபொழுது, அதை — அந்த அற்புத சம்பவத்தை — புகைப் படமாகப் பிடித்து, பத்திரிகைகளில் போடும் வாய்ப்பு, ஆச்சாரியார் சிறுபையனாக இருந்த ஒரு காரணத்தால் ஏற்படவில்லை. ஆச்சாரியார் பெரியவராகி, வக்கீல் தொழில் பார்த்து, கதர்ச்சுமந்து விற்று, கைதாகி, சிறைசென்று மீண்டு, தியாகி என்றபட்டத்தை ஏற்று, மந்திரியானவுடன், அவருடைய அதியற்புத சம்பவங்களெல்லாம், புகைப்படங்களாக எடுக்கப்பட்டு, பத்திரிகைகளில் வெளிவரும் வாய்ப்பைப்பெற்றன. 1938ல் இவர் மந்திரியாக இருந்தபொழுது, சலவைத் தொழில் செய்திருக்கிறார்; அது புகைப்படமாகப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. டில்லியில் இவர் கவர்னர் ஜெனரலாக இருந்தபொழுது, ஒரு விவசாயியாக இருந்திருக்கிறார். காலில் செருப்புடன் ஏருழும் காட்சி பத்திரிகைகளில்பிரமாதமாக வெளிவந்தது; "இதோ நமது ராஜாஜி—கவர்னர் ஜெனரல், தமது கௌரவத்தையும் கவனியாது, ஏருழும் காட்சியினைக் காணீர்!" என்று பத்திரிகைகள் செய்திகளைப் பிரசுரித்துக் கொட்டின; ஆனால், பாவம்! 65 ஆண்டுகளுக்குமுன், அவர், குலாலர் மண்பாண்டங்களைத் தயாரித்ததைக் கவனித்துக்கொண்டிருந்தபொழுது, புகைப்படம் எடுக்கும் வாய்ப்புக் கிட்டவில்லையே என்பதை எண்ணும்பொழுது, உள்ளபடியே நமக்கெல்லாம் வருத்தந்தான் உண்டாகிறது.

இவருடைய சிறுவயதில், இவர் கண்ட இன்னொரு அனுபவம் என்னவென்றால்,

> "இளம்வயதில், எனது சகோதரனுக்குக்கூட, தென்னை அல்லது பனைமரத்தில ஏறக்கூடிய பழக்கம் இருந்தது. கிணற்றில் மூழ்கி தவறிவிழுந்த பாத்திரங்களையும் எடுத்து வருவான்"

என்று கூறுவதன் வாயிலாக, தான் இப்பொழுது புகுத்தும் ஆரம்பக் கல்வித் திட்டத்திற்கு, இதனை ஆதாரமாகக் காட்டுகிறார். இது எந்த அளவுக்கு ஆரம்பக் கல்விக்கு துணைசெய்யுமென்பது, நமக்குப் புரியவில்லை உண்மையிலேயே, ஆச்சாரியாரின் சகோதரன், பனை அல்லது தென்னைமரம் ஏறும் தொழிலில் ஈடுபட்டிருந்தார் என்று சொன்னாலாவது, 'எங்கள் குலம் பிராமண குலம், என்றபோதிலும், என்னுடைய சகோதரன், பனை தென்னை ஆகிய மரங்களில், கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தார்; நான் மதுவிலக்குக் கொண்டுவந்த காரணத்தால், அவருக்கு வேலை இல்லாமல் போய்விட்டது இப்பொழுது அவர், பதநீர் இறக்கி, பனைவெல்லம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்" என்று கூறுவதன்வாயிலாக, தொழிலுக்கே உயர்வும் முதன்மையும் கொடுக்கப்படும் இந்த ஆரம்பக் கல்வித் திட்டத்தை, எல்லோரும் ஆதரியுங்கள் என்று கூறினால், வாதத்திற்காவது ஒத்துக்கொள்ளலாம். ஆனால், ஆச்சாரியாரின் சகோதரனோ, மரங்களில் ஏறவும் கிணற்றில் மூழ்கவும் கற்றுக்கொண்டிருந்தாரே தவிர, அந்தத் தொழில்களையே அவர் தம்முடைய வாழ்க்கைக்காகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஆச்சாரியாரோ, துணி வெளுக்கவும், ஏர் உழவும், மண்பாண்டம் செய்வதைக் கவனிக்கவும் கற்றுக்கொண்டாரே ஒழிய, அந்தத் தொழில்களில் ஏதாவது ஒன்றை, தம்முடைய வாழ்க்கைக்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால், கல்விவாசனை ஒரு சிறிதும்பெறமுடியாதபடியும், ஏதாவது ஒரு தொழிலை நல்லமுறையில் கற்றுக்கொள்ள முடியாதபடியும் செய்யக்கூடிய இந்த ஆரம்பக்கல்வித் திட்டத்தை, இந்நாட்டிலுள்ள சின்னஞ்சிறுவர்களுக்கு புகுத்துவதன் வாயிலாக, அவர்களை, என்றென்றும் நிரந்தர அடிமைகளாகவே வைத்துக்கொள்ள விரும்புகிறார்— அதற்காகவே திட்டம் தீட்டுகிறார், ஆச்சாரியார்.

இப்போது, சிலகாலமாகத்தான், பார்ப்பனரல்லாத மக்களும், படித்துப் பட்டம் பெற்று, முன்னேறுவதற்கு வழியுண்டாகியிருக்கிறது. மனு வகுத்த சாத்திரம் மங்கிப் போய், மக்களில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் முறையும் மாறி, எல்லோரும் சமம் என்ற நிலை ஏற்பட்டு வருவதானது, 'அவர்களுக்குப்' பிடிக்கவில்லை. எனவேதான், அந்த 'அவர்களின்' சார்பில், ஆச்சாரியார், இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். இந்தத் திட்டத்திற்கு, எதற்குமில்லாத முக்கியத்துவம் கொடுக்கிறார்.

> "நான் செய்த காரியங்களில் எல்லாம் இதுதான் மிக முக்கியமானது என நினைக்கிறேன். நான் இவ்விஷயத்தில் ரொம்பவும் தீவிரமாக இருக்கிறேன்"

என்று கூறுகிறார் இந்தத் திட்டத்தைப் புகுத்துவதில், ஆச்சாரியார், ஏன் இவ்வளவு பிடிவாதமாகவும் தீவிரமாகவும் இருக்கிறார் என்பதை எண்ணும்பொழுதுதான், 'அவர்கள்' என்று நாம் கூறும் சொல்,

(11-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
25 Tirukkachinambi St., Kancheepuram.